பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 ஐப்பசி 03 திங்கட்கிழமை (20-10-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:326

## அழிவுப் பாதையில் செல்லும் அரசை ஆட்சி பீடத்திலிருந்து அகற்றுவோம்

### பதுளையில் எதிர்க்கட்சித் தலைவர் சூளுரை

பதுளை,ஒக்.20

"இந்த நாட்டை அழிவுப்பாதைக்கு இட்டுச் சென்றுகொண்டிருக்கும் இன்றைய அரசை, ஆட்சி பீடத்திலிருந்து அகற்ற வேண்டிய தருணம் தற்போது ஏற்பட்டிருக்கின்றது. ஜனாதிபதி தமது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தக் கூடிய சூழ்நிலை தென்படுகின்றது."

- இவ்வாறு கூறியுள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்தராஜபக்ஷ.

அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பதுளையில் நேற்று இடம்பெற்ற கண்டனப் பேரணியையடுத்து அங்கு நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இக்கண்டனப் பேரணிக்கு முன்னர், பதுளை கேட்போர் கூடத்தில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாடு நடைபெற்றது.

எதிர்க்கட்சித் தலைவர் அங்கு தமதுரையில் மேலும் கூறியதாவது:-

'மக்களின் ஆதரவு இன்று மீண்டும் எமது பக்கம் திரும்பியுள்ளது. நாட்டு மக்களின் எதிர்பார்ப்புக்கள், தேவைகள் எவையும் கடந்த ஒன்றரை வருட காலமாகவே நிறைவேற்றப்படவில்லை. இளைஞர், யுவதிகள் வேலைவாய்ப்பின்றி பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர். விலைவாசி உயர்வினால் மக்கள் சொல்லொணாத்துயரை அனுப

(14ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.ஆஸ்பத்திரி படுகொலைகளின் 16ஆவது நினைவு தினம் நாளை

யாழ்ப்பாணம்,ஒக்.20

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையிலிருந்த சமயம் இந்தியப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட 21பணியாளர்களின் பதினாறாவது நினைவு நாள் நாளை செவ்வாய்க்கிழமை அனுஷ்டிக்கப்படுகிறது.

டாக்டர்கள், தாதியர்கள் மற்றும் ஊழியர்கள் என 21பேரை 1987ஆம் ஆண்டு ஒக்ரோபர் 21ஆம் திகதி இந்திய அமைதிப் படையினர் கொடூரமாகச் சுட்டுக்கொன்றனர்.

கொலையுண்ட 21பேரின் நினைவாக யாழ். ஆஸ்பத்திரியில் அவர்களது உருவப்படங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அந்த உருவப் படங்களுக்கு மலர் மாலை அணிவித்து 21 சுடர்கள் ஏற்றி அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நாளை யாழ். ஆஸ்பத்திரியில் நடைபெறவுள்ளது. தொடர்ந்து அஞ்சலிக்கூட்டமும் இடம்பெறும்.

யாழ். ஆஸ்பத்திரியிலுள்ள இந்து மற்றும் கிறிஸ்தவ ஆலயங்களிலும் நாளை விசேட பூசைகள் நடைபெறும்.

நாளையதினம் வைத்தியசாலைப் பணியாளர்கள் அனைவரும் கறுப்புப் பட்டி அணிந்து கடமையில் ஈடுபடுவர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-9-7-15-139)

# புலிகளின் ஆயுதக் கப்பல் ஒன்றை மடக்கும் முயற்சி முறியடிப்பாம்!

## கடற்படையினர் கூறும் மர்மக் கப்பல்: விசாரணைக்குப் பிரதமர் உத்தரவு

கொழும்பு,ஒக்.20

முல்லைத்தீவு கடற்பரப்புக்கு அப்பால் வந்ததாகக் கூறப்படும் மர்மக் கப்பல் தொடர்பாக உடனடி விசாரணை மேற்கொள்ளும் படி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமாதானச் செயலகப் பணிப்பாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை மீனவர்களிடமிருந்து கிடைத்த தகவலை அடிப்படையாகக் கொண்டு அந்தக் கப்பலை பரிசோதனை செய்யத்தாம் முயன்றார்கள் என்று கடற்படையின் பேச்சாளர் ஜயந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

அந்த மர்மக் கப்பலை தாம் சோதனையிடப் போகிறார்கள் என்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கு தெரிவித்ததையடுத்து அந்தக் கப்பல் அங்கிருந்து சென்று விட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு கடற்பரப்பிற்கு அப்பால் 125 கடல் மைல்களுக்குள் அந்தக் கப்பல் காணப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விடயம் பற்றி உடனடி விசாரணை மேற்கொள்ளுமாறு பிரதமர் சமாதான நடவடிக்கை செயலகத் தலைவர் பேர்னாட் குணதிலகவைப் பணித்துள்ளார். (ஐ-12)

## கண்காணிப்புக் குழுவின் மீது கடற்படைத் தளபதி குற்றச்சாட்டு

கொழும்பு,ஒக்ரோபர்20

**புலிகளுக்கு ஆயுதங்கள் ஏற்றிவந்த கப்பல் ஒன்றைக் கடற்படையினர் சுற்றிவளைக்க எடுத்த முயற்சி போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் நடவடிக்கையால் முறியடிக்கப்பட்டுவிட்டது.**

**இவ்வாறு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு மீது குற்றம் சுமத்தும் அறிக்கை ஒன்றை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்.**

இராணுவ விமர்சகர் ஒருவர் ஆங்கில வார இதழ் ஒன்றில் தான் வரையும் பாதுகாப்பு நிலைவரம் தொடர்பான கட்டுரையில் இவ்வாறு தகவல் வெளியிட்டிருக்கின்றார்.

புலிகளின் ஆயுதக் கப்பல் ஒன்று முல்லைத்தீவுக்கு அப்பால் 250 மைல தொலைவில் இருந்து முல்லைத்தீவுக் கரையை நோக்கி வந்துகொண்டிருப்பதாக கடந்த வியாழனன்று மாலை கடற்படைக்குத் தகவல் கிடைத்தது.

இத்தகைய விடயங்களில் புலிகளின் கப்பலை நெருங்கி நடவடிக்கை எடுப்பதாயின் அத்தகைய நடவடிக்கையை மேற்கொள்ளச் செல்லும் கடற்படைக் கப்பலில் இலங்கை கண்காணிப்புக்குழுப் பிரதிநிதியும்

(14ஆம் பக்கம் பார்க்க)

## பொலீஸார் - பொதுமக்கள் உரும்பிராய் முறுகல்

கோப்பாய்,ஒக்.20

உரும்பிராய் சந்திக்குச் சமீபமாக வீதியில் மோட்டார் சைக்கிள் ஒன்றை வழிமறிக்க முயன்ற பொலீஸாருக்கும் அப்பகுதியில் கூடிநின்ற பொதுமக்களுக்கும் இடையே சிறிது நேரம் முறுகல் நிலை ஏற்பட்டது.

நேற்று மாலை 6.30 மணியளவில் வீதியில் வந்த மோட்டார் சைக்கிள் ஒன்றை வழிமறித்து சோதனையிட பொலீஸார் முயன்றனர் என்றும் -

(14ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்களில் மூன்றாம் தரப்பை தமிழ் காங்கிரஸ் விரும்பவில்லை

### அதன் தலைவர் விநாயக மூர்த்தி எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.20

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் நடைபெறவிருக்கும் பேச்சுக்களில் மூன்றாம் தரப்பின் தலையீடு அவசியமற்றது. அவசியம் ஏற்பட்டால் முஸ்லிம் தரப்பை புலிகள் அழைத்துப் பேச்சுக்கள் நடத்துவதே சிறந்தது என்று அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அ.விநாயகமூர்த்தி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:-

புரையோடிப்போன பிரச்சினையொன்று பேச்சு மேசைக்கு வரும்போது அதில் சம்பந்தப்பட்ட இரண்டு அணிகள் மட்டுமே கலந்து பிரச்சினைக்குத் தீர்வுகாண முயலவேண்டும். அதில் மூன்றாவது தரப்பொன்று கலந்துகொள்வது பேச்சுக்கு உசிதமானதல்ல.

தமிழீழத்தேசியத் தலைவர் வேபிரபாகரன் முஸ்லிம் காங்கிரஸ் தலைவருக்கு அளித்த வாக்குறுதியை மீறமாட்டார். பிரச்சினைக்கு இறுதித் தீர்வொன்று காணமுற்படும்போது முஸ்லிம் தரப்பை அழைத்து கலந்துரையா

(14ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு-புலிகள் புதனன்று சந்திப்பு

கொழும்பு,ஒக்.20

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான விசேட சந்திப்பு ஒன்று நாளைமறுதினம் புதன் கிழமை கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளது.

கிளிநொச்சியில் உள்ள புலிகளின் அரசியல்துறைப் பணிமனையில் முற்பகல் 11மணியளவில் இச்சந்திப்பு இடம்பெறவுள்ளது.

இச்சந்திப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் உட்பட விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும், தமிழ்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ஐ-12)

## இராமேஸ்வரம் மீனவர்கள் மீது கடற்படையினர் துப்பாக்கிச் சூடு

இராமேஸ்வரம்,ஒக்.20

சர்வதேச கடல் எல்லையில் மீன்பிடித்துக்கொண்டிருந்த இராமேஸ்வர மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினர். இதனால் மீனவர் ஒருவர் படுகாயமடைந்தார். ஏனையோரை படையினர் துப்பாக்கி மற்றும் கம்பிகளால் தாக்கினர் என்று கூறப்படுகின்றது.

இராமேஸ்வரத்தில் இருந்து நேற்று முன்தினம் காலை தங்கச்சிமடத்தைச சேர்ந்த நால்வர் விசைப் படகில் இந்திய - இலங்கை சர்வதேச கடல் எல்லையில் மீன்பிடித்துக்கொண்டிருந்தனர்.

அப்போது மீன்பிடி வலை ஒன்று அந்த படகின் இயந்திரத்தில் சிக்கியது. இதனால், இயந்திரம் இயங்காமல் நின்று போனது. உடனே அருகில் சென்ற மற்றொரு விசைப்படகை உதவிக்கு அழைத்து தங்களை இராமேஸ்வரத்திற்கு இழுத்துச் செல்லும்படி கேட்டுள்ளனர்.

அதன்படி பழுதான படகை கயிறால் கட்டி இழுத்துச் சென்றபோது திடீரென அங்கு சென்ற கடற்படையினர் மீனவர்களிடம் விசாரணை நடத்

(14ஆம் பக்கம் பார்க்க)

## மணல்காட்டில் புதிய படை முகாம்

கிளிநொச்சி,ஒக்.20

வடமராட்சி, மணல்காடு பகுதியில் புதிய இராணுவ முகாம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் படையினர் ஈடுபட்டு வருவதாக 'புலிகளின் குரல்' வானொலி நேற்றுத் தெரிவித்தது.

அந்த முகாம் அமைக்கப்படுவதால் அப்பகுதி மக்கள் மிகுந்த அச்சம் கொண்டுள்ளனர் என்றும் -

அப்பகுதிக்கு விறகு எடுக்கச் செல்லவும் அங்கு நடமாடுவதற்கும் பொது மக்களுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-12-9)

சிறுக சிறுக

பிள்ளைகளுக்காக
குடும்பத்துக்காக
நாட்டுக்காக
நமக்காக
சில்லறைகளானாலும்
சேமிப்போம்.



ஒக்டோபர் மாதம் தேசிய சேமிப்பு வங்கியின் சேமிப்பு மாதமாகும். இன்றே சேமிப்புக் கணக்கொன்றினை ஆரம்பித்து ஒவ்வொரு சதத்தையும் சேமிக்க பழகுங்கள். இத்தினத்தில் எமது வங்கி க.பொ.த. உயர்தரத்தில் சிறப்பாகச் சித்தி எய்திய 200 வசதி குறைந்த மாணவர்களுக்கு பணப் பரிசுகளை வழங்கவுள்ளது. மாவட்ட அடிப்படையில் ஒவ்வொரு பாடநெறியிலும் பயிலும் (விஞ்ஞானம்/கணிதம்/கலை/வர்த்தகம்) இருவருக்கு இப் பரிசுகள் வழங்கப்படும். இது தேசத்தின் நலனுக்கான எமது பங்களிப்பாகும்.

NSB

# எமது வரைவை ஸ்ரீலங்கா அரசு நிராகரித்தால் சர்வதேசத்தின் எதிர்ப்பை சந்திக்க நேரிடும்

## மட்டக்களப்பில் கருணா அம்மான் தெரிவிப்பு



கொழும்பு,ஒக்.20

சர்வதேசத்தின் அங்கீகாரத்துடன் ஸ்ரீலங்கா அரசிடம் விடுதலைப் புலிகளால் கையளிக்கப்படவுள்ள இடைக்கால நிர்வாக இறுதி வரைவை ஏற்றுக்கொள்ளாவிடின் சர்வதேசத்தின் கடுமையான எதிர்ப்புக்களை ஸ்ரீலங்கா அரசு சந்திக்க வேண்டி வரும்.

- இவ்வாறு கிழக்கு மாவட்ட விசேட தளபதி கேணல் கருணா அம்மான் தெரிவித்தார்.

இடைக்கால நிர்வாக வரைவு தொடர்பாக இறுதிப் பரிசீலனை மேற்கொள்ளும் வகையில் அயர்லாந்து, நோர்வே போன்ற நாடுகளில் இரு வார விஜயத்தை முடித்துக்கொண்டு தாயகம் திரும்பிய விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கருணா அம்மான், மட்டக்களப்பு இலுப்பையடிச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் ஸ்ரீலங்கா விசேட ஹெலிகொப்டரில் சனியன்று காலை 10.30 மணிக்கு வந்திறங்கினார்.

அங்கு அவர் கூறியதாவது:-

சர்வதேசத்தின் சட்டவல்லுநர்களின் ஆலோசனைகள் பெறப்பட்டு, எமது சட்டவல்லுநர்களும் இணைந்து பல உலக நாடுகளில் உள்ள ஆட்சி முறையினை விரிவாகப் பரிசீலித்தே இடைக்கால நிர்வாகம் தொடர்பான இறுதி வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்வரைவு தேசியத் தலைவரிடம் உடனடியாக கொடுக்கப்பட்டு அவரின் அங்கீகாரத்துடன் இம்மாதம் 26 ஆம் திகதிக்குப் பின்னர் நோர்வேயின் ஊடாக ஸ்ரீலங்கா அரசிடம் கையளிக்கப்படும். ஸ்ரீலங்கா அரசுதான் எம்மை இனிப் பேச்சுக்கு அழைக்க வேண்டும்.

நாங்கள் சமாதானப் பேச்சுக்களில் தொடர்ந்து ஈடுபட எந்த நேரம் தயாராக உள்ளோம் - இப்படி அவர் கூறினார்.

இடைக்கால நிர்வாக யோசனையை அரசு பரிசீலனை செய்வதற்கு முன் நீங்கள் பேச்சுக்குச் செல்வீர்களா? எனக் கேட்ட போது - எமது இடைக்கால நிர்வாக யோசனையை அரசிடம் கையளித்தவுடன், அரசு அதனை பரிசீலனை செய்வதற்கு முன் எம்மைப் பேச்சுக்கு அழைத்தால், நாம் அப்பேச்சுக்களில் கலந்து கொள்ளத் தயாராகவே உள்ளோம் - என்றார்.

வடக்கு, கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்கள் தொடர்பாகவும் முஸ்லிம் அரசியல் வாதிகளின் அண்மைக்கால கருத்துக்கள் தொடர்பாகவும் கேட்டபோது -

வடக்கு - கிழக்கில் வாழும் முஸ்லிம் சமூகத்தை நாம் எமது தமிழ்மக்களின் ஓர் அங்கமாகவே கருதுகின்றோம். தமிழ்மக்களுக்கு வழங்கப்படும் சகல உரிமைகளையும் முஸ்லிம் மக்களுக்கும் தங்குதடையின்றி அவர்கள் எதிர்பார்த்ததை விடவும் மேலும் சிறப்பாக - வழங்க நாம் உறுதியாகவுள்ளோம். முஸ்லிம் மக்களை நாம் ஒரு போதும் ஒதுக்கவோ, அவர்களின் உரிமைகளைப் பறிக்கவோ மாட்டோம். எமது தாயக மண்ணில் தமிழ், முஸ்லிம் மக்கள் இணைந்து சகல உரிமைகளுடனும் வாழ்வதையே நாம் வலியுறுத்துகின்றோம் - என்று அவர் கூறினார்.

அயர்லாந்து, நோர்வே நாடுகளுக்கு இருவார பிரயாணத்தை முடித்துக்கொண்டு கருணா அம்மான் சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு இலுப்படிச்சேனை பொதுவிளையாட்டு மைதானத்தில் ஹெலிகொப்டரில் வந்திறங்கினார்.

அவரை புலிகளின் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஷ், தளபதி பிரபா, தளபதி ரொபட், தளபதி நாகேஷ், மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் இ.கௌசல்யன் ஆகியோர் வரவேற்றனர். (ஐ)

# காணாமற்போனோர் கதி பற்றி ஜனாதிபதியுடன் பேச முயற்சி

## பாதுகாவலர் சங்கம் அவருடன் தொடர்பு

யாழ்ப்பாணம்,ஒக்.20

வடபகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகள் அடுத்த மூன்று வார காலத்துக்குள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை சந்தித்துப் பேசவுள்ளனர்.

இச்சந்திப்பின் போது பேசப்படவுள்ள விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதியின் பிரத்தியேக செயலர் விவரம் கேட்டதற்கமைவாக அவை பாதுகாவலர் சங்கத்தால் ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பாதுகாவலர் சங்கம் அனுப்பி வைத்துள்ள விடயங்கள் வருமாறு:-

✪ 'ரிவிரச' நடவடிக்கை மூலம் யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்ட பின்னர், மீளக்குடியமர்ந்த மக்களில் பலர் படையினரால் கைதுசெய்யப்பட்ட பின்னர் காணாமற்போயினர். அவ்வாறு காணமற்போன 234 பேரின் நிலை குறித்து அறிதல் -

✪ இலங்கை முழுவதுமுள்ள சிறைச்சாலைகளில் காணாமற்போனோர் சங்கக் குடும்பத்தினர் எவரும் இல்லையெனக் கூறப்படுவதன் உண்மையை அறிதல் -

✪ கடந்த ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகளுடன் 'செய்மதி' மூலம் உரையாடிய ஜனாதிபதி, படையினரால் கைதானவர்களில் 18 பேர் கொல்லப்பட்டுள்ளனர் எனவும் ஏனையோரின் உயிருக்கு உத்தரவாதம் தருவதாகவும் கூறியது தொடர்பாகப் பேச்சு நடத்துதல் -

✪ கடந்த வருடம் மார்ச் மாதம் பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகள், யாழ். அரச அதிபர் மற்றும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோரின் ஏற்பாட்டில் பிரதமர் அலுவலகத்தில் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியிருந்தனர். அப்போது குடாநாட்டில் காணாமற்போனோர் தொடர்பாக படை அதிகாரி ஜானக பெரேராவை விசாரணை செய்யவேண்டும் எனவும் -

✪ படையினரால் கொல்லப்பட்டவர்களின் உறவினர்களுக்கு ரூபா 50 லட்சம் நஷ்டஈடு வழங்க வேண்டும் எனவும் கேட்டிருந்தது - அது தொடர்பாகப் பேச்சு நடத்தல்.

✪ படையினரால் கைதுசெய்யப்பட்டவர்களில் கொல்லப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் மரணச் சான்றிதழில் 'படையினரால் கொல்லப்பட்டார்' என்பது குறிப்பிடப்படல் வேண்டும்.

✪ மனித உரிமைகள் ஆணைக் குழுவின் வதிவிடப் பிரதிநிதிகளாக பாதுகாவலர் சங்க உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டு ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் அவதானிக்கப்பட வேண்டும்.

✪ அரச சேவைகளுக்கு ஆள்சேர்ப்புச் செய்யப்படுகையில் காணாமற்போனவர்களின் குடும்பத்தில் உள்ள தகுதியானவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுதல் -

மேற்படி விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தவுள்ளதாக அவரின் பிரத்தியேக செயலாளருக்கு பாதுகாவலர் சங்கம் அறிவித்துள்ளது. (ஐ-9)





தகவல் தொழில் நுட்பத்துறையில் புகழ்பெற்ற சர்வதேச பயிற்சி நிறுவனமான என்.ஐ.ஐ.ரீ நிறுவனத்தின் கிளை நேற்று யாழ். கஸ்தூரியார் வீதியில் உள்ள 347ஆம் இலக்கக் கட்டடத்தில் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் நாடாவெட்டி கிளை அலுவலகத்தைத் திறந்து வைப்பதை முதல் படத்திலும் என்.ஐ.ஐ.ரீ. நிறுவனத்தின் இலங்கை முகாமைத்துவப் பணிப்பாளர் சுனிமால் வீரசூரிய மங்கள விளக்கேற்றுவதை அடுத்த படத்திலும் காணலாம்.

## திருநெல்வேலியில் விபத்து

யாழ்ப்பாணம்,ஒக்.20

திருநெல்வேலிச் சந்திக்கு அண்மையில் நேற்று மாலை இடம்பெற்ற பஸ் - சைக்கிள் விபத்தில் சைக்கிளில் வந்த குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்தார்.

திருநெல்வேலி, சிவன் புதிய வீதியைச் சேர்ந்தவரான கே.கமலசொரூபன் (வயது 27) என்பவரே படுகாயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ-9)

## மீள்குடியமர்வு கொடுப்பனவு

தென்மராட்சி,ஒக்.20

தென்மராட்சிப் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள சரசாலை தெற்கு, சரசாலை வடக்கு, மீசாலை கிழக்கு, உசன், மந்துவில் வடக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 724 குடும்பங்களுக்கு உடனடி மீள்குடியமர்வு கொடுப்பனவான 25 ஆயிரம் ரூபா வங்கிகளில் வழங்கப்பட்டு வருகிறது.

மீசாலை கிழக்கு பிரிவில் 352 பேருக்கும், உசன் பிரிவில் 114 பேருக்கும், சரசாலை தெற்கு பிரிவில் 110 பேருக்கும், மந்துவில் வடக்கு பிரிவில் 75 பேருக்கும், சரசாலை வடக்கு பிரிவில் 73 பேருக்கும் இக் கொடுப்பனவு வழங்கப்படுவதாக பிரதேச செயலக திட்டமிடல் பிரிவினர் தெரிவித்தனர். (ஐ-117)





தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பத்திரிகையாளர்களுக்கு விருது வழங்கும் விழா கொழும்பில் நடைபெற்றது. அந்த விழாவில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பிரதேச பத்திரிகையாளரும் 'உதயன்' வடமராட்சி செய்தியாளருமான சின்னத்துரை தில்லைநாதனுக்கு அமைச்சர் மகேஸ்வரன் பொன்னாடை போர்த்து விருது வழங்குவதை முதல் படத்தில் காணலாம்.

அந்த விழாவில் விருதுபெற்ற பிரதேச பத்திரிகையாளர்கள் கா.இரத்தினலிங்கம் (திருகோணமலை), சி.தில்லைநாதன் (யாழ்.மாவட்டம்), இரா.உதயகுமார் (மட்டக்களப்பு மாவட்டம்), த.விவேகராசா (வன்னி மாவட்டம்), ஏ.எல்.எம்.சலீம் (அம்பாறை மாவட்டம்) ஆகிய ஐவரும் விருதுகளுடன் அடுத்த படத்தில் காணப்படுகின்றனர்.

### டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில்

# ஆகக்கூடுதலான ஓட்டங்கள்: சச்சின் 5ஆம் இடத்தில்!



மொஹாலி,ஒக்.20

டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் ஆகக்கூடுதலான ஓட்டங்களைப் பெற்ற வீரர்கள் வரிசையில் இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்டவீரர் சச்சின் டெண்டுல்கர் 5ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

மொஹாலியில் இடம்பெற்றுவரும் நியூஸிலாந்துக்கு எதிரான நேற்றைய ஆட்டத்தில் 55ஓட்டங்கள் பெற்றதன் மூலம் யாவிட்மியாண்டட்டின் சாதனையை முறியடித்து இவர் 5ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

30வயதான சச்சின் நியூஸிலாந்து அணிக்கு எதிரான தொடரில் தனது 107 ஆவது போட்டியை ஆரம்பிக்கும் போது 8ஆயிரத்து 826ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

இதன்போது பாகிஸ்தான் யாவிட் மியாண்டட் 8ஆயிரத்து 832 ஓட்டங்களைப் பெற்று உலகில் டெஸ்ட் கிரிக்கெட்போட்டிகளில் ஆகக் கூடுதலான ஓட்டங்களைப் பெற்றவீரர்களின் வரிசையில் 5ஆவது இடத்தைப் பிடித்திருந்தார்.

நேற்றைய போட்டியில் நியூஸிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் பட்ளர் வீசிய பந்தை 4ஓட்டங்களாக மாற்றியதன் மூலம் மியாண்டட்டின் சாதனையை சச்சின் முறியடித்தார். ஆஸ்திரேலிய அணியின் அலன்போர்டர் 11 ஆயிரத்து 174 ஓட்டங்களுடன் முதலாமிடத்திலும் 10ஆயிரத்து 660 ஓட்டங்களுடன் ஆஸ்திரேலிய வீரர் ஸ்ரீவோ, இரண்டாமிடத்திலும் இந்திய அணியை சேர்ந்த சுனில் கவாஸ்கரும் உள்ளனர்.

இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவர் கிரஹாம் கூச் 4ஆம் இடத்தில் உள்ளார். (ஐ-5)

# அன்னை திரேசாவுக்கு நேற்று புனிதர் பட்டம்

வத்திக்கான்,ஒக்.20


அன்னை திரேசாவுக்கு திட்டமிட்டபடி நேற்று புனிதர் பட்டம் வழங்கப்பட்டது. பாப்பரசர், புனிதர் பட்டம் வழங்கப்படுவதற்கான அறிவிப்பை வெளியிட்டார்.

வத்திக்கானில் உள்ள சென். பீற்றர் தேவாலய சதுக்கத்தில் புனிதர் பட்டம் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் லட்சக்கணக்கானோர் கலந்து ஆசிபெற்றனர்.

இந்த ஆண்டு நடைபெறும் மிக முக்கிய நிகழ்வாக இது கருதப்படுகிறது.

ஒருவர் இறந்து பல ஆண்டுகளுக்கு பின்னர்தான் புனிதர் பட்டம் வழங்கப்படும். ஆனால் அன்னை திரேசாவுக்கு அவர் இறந்து 6ஆண்டுகளில் புனிதர் பட்டம் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

அன்னை திரேசா அற்புதமானவர், கடவுளின் கருணையால் பிறந்தவர், மற்றவர்களுக்காகவே வாழ்ந்தவர், அவர் புனிதர் ஆகியுள்ளார் என்று வத்திக்கானில் உள்ள கர்தினால் ஒருவர் கூறினார்.






அன்னை திரேசாவுக்கு புனிதர் பட்டம் வழங்கும் நிகழ்வு வத்திக்கானில் உள்ள சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தில் நேற்று இடம்பெற்ற போது திரண்டிருந்த மக்களை மேலுள்ள படங்களில் காணலாம்.

# மீண்டும் மிரட்டுகிறார் பின்லேடன்

அமெரிக்கா, ஈராக்கிலிருந்து வாபஸாக வேண்டும்.இல்லையேல் அமெரிக்காவினுள்ளும், வெளியிலும் அதற்கெதிரான தற்கொலைத் தாக்குதல்களை எதிர்கொள்ளவேண்டியிருக்கும் என்று ஒஸாமா பின்லேடன் மிரட்டியிருக்கிறார்.

அல்-ஜெஸீரா தொலைக்காட்சியில் ஒலிபரப்பப்பட்ட ஒலி நாடாவிலேயே இந்த மிரட்டல் விடுக்கப்பட்டிருக்கிறது.

ஈராக்கில் அமெரிக்கப்படைகளுக்கெதிராக நடத்தப்படும்தாக்குதல்களுக்கு அதில் பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

சனியன்று ஒலிபரப்பப்பட்ட இந்த ஒலிநாடா இரு பகுதிகளைக் கொண்டன என்று அல்-ஜெஸீரா அறிவித்துள்ளது.

ஒன்றில் உலக முஸ்லிம் இளைஞர்கள், முக்கியமாக ஈராக்கின் அயல் நாடுகள், யேமன் நாட்டு இளைஞர்கள் ஈராக் சென்று புனித யுத்தத்தில் ஈடுபடவேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது.



"ரைக்கிரிஸ், யூப்பிரட்டிஸ் படுகுழிக்குள் அமெரிக்கா வீழ்ந்துவிட்டது.

"ஈராக்கின் எண்ணெய் வளம் இலகுவில் அகப்படும் என்று புஷ் நினைத்தார். இப்பொழுது அவர் சிக்கலான நிலைமைக்குள் மாட்டிக் கொண்டார்" என்று ஓர் ஒலிநாடாவில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மற்றைய ஒலிநாடாவில் அமெரிக்காவுக்கு எச்சரிக்கை விடப்பட்டிருக்கிறது.

"அமெரிக்க மக்களே நாம் உங்களுக்கெதிராக போரிடுவதை ஆண்டவன் ஆசீர்வதிக்கிறார். நீங்கள் உங்களது அநீதிக்கும் முட்டாள் தனத்திற்கும் முடிவுகட்டும்வரை நாம் அமெரிக்காவினுள்ளும், வெளியேயும் மாவீர தியாகங்களில் ஈடுபடுவோம்.

"குறிப்பாக நீதிக்கு மாறான போரில் ஈடுபடும் பிரிட்டன்,ஸ்பெயின், ஆஸ்திரேலியா, போலாந்து, ஜப்பான், இத்தாலி நாடுகளுக்கும் உரிய நேரத்தில், உரிய இடத்தில் பதிலளிக்கும் உரிமை எமக்குண்டு. இஸ்லாமிய நாடுகளான குவைத் மற்றும் வளைகுடாநாடுகள் இதற்கு விதிவிலக்கல்ல" என்று இரண்டாவது ஒலிநாடாவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# விமான நிலையத்தில் சிம்ரன் அரைமணி நேரம் தடுத்துவைப்பு

நடிகை சிம்ரன் விமான நிலைய அதிகாரியுடன் ரகளையில் ஈடுபட்டதால் அங்கு அரைமணி நேரம் சிறை வைக்கப்பட்டார்.

நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் சென்னையில் உள்ள உள்நாட்டு விமான நிலையத்துக்கு தற்போதைய காதலன் தீபக்கை வழி அனுப்ப சிம்ரன் வந்திருந்தார்.

தீபக் மட்டும் டிக்கெட் வைத்திருந்தார். சிம்ரன் விமான நிலையத்துக்குள் செல்வதற்கான 20 ரூபா அனுமதி நுழைவுச்சீட்டை வாங்காமல் காதலனுடன் உள்ளே நுழைய முயன்றார். உடனே நுழைவாயிலில் நின்ற அதிகாரி சிம்ரனிடம் நுழைவு அனுமதிச் சீட்டைக் காட்டும்படி கேட்டார். ஆனால், சிம்ரன், "நான் பிரபல நடிகை அது உங்களுக்குத் தெரியாதா" என்று திருப்பிக் கேட்டிருக்கிறார்.

உடனே அவர், "நீங்கள் யாராக இருந்தாலும் நுழைவுச் சீட்டு இல்லாவிட்டால் உள்ளே அனுமதிக்க முடியாது" என்று கூறினார். இதனால் கோபம் அடைந்த சிம்ரன் அந்த அதிகாரியைப் பிடித்துத் தள்ளி விட்டு காதலனுடன் உள்ளே சென்றார். இதனால் விமான நிலையத்தில் பரபரப்பு ஏற்பட்டது.



"நுழைவுச் சீட்டு இல்லாமல நுழைந்த சிம்ரனுக்கு அபராதம் விதிக்க வேண்டும். இல்லாவிட்டால் நாங்கள் போராட்டத்தில் ஈடுபடுவோம்" என்று விமான நிலைய ஊழியர்கள் வலியுறுத்தினர்.

இந்த விடயம் விமான நிலைய பணிப்பாளர் வரை சென்றது. உடனடியாக சிம்ரன் பணிப்பாளர் அறைக்கு கூட்டிச் செல்லப்பட்டார். அங்கு சுமார் அரை மணித்தியாலம் எதுவித விசாரணையும் இன்றி தடுத்து வைக்கப்பட்டார். சிம்ரன் மன்னிப்புக் கேட்டதையடுத்து அவரை அங்கிருந்து செல்ல அதிகாரிகள் அனுமதித்தனர்.

## எய்ட்ஸால் 2 லட்சம் பேர் சீனாவில் மரணம்!

பெய்ஜிங்,ஒக்.20

சீனாவில் எய்ட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கை அபாய அளவில் உள்ளது. 10 லட்சத்து 40 ஆயிரம் பெருக்கு எய்ட்ஸ் நோய் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இவர்களைத் தவிர 2 லட்சம் பேர் இறந்துவிட்டனர்.

எய்ட்ஸ் மற்றும் பால்வினை நோய்த் தடுப்பு அமைப்பின் துணைத் தலைவர் தாய் ஷிசெங் வெள்ளிக்கிழமை இதைக் கூறினார். 2002ஆம் ஆண்டில் சீனாவில் 40,560 பேர் மட்டுமே எச்.ஐ.வி. கிருமியால் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இந்நோய் விரைவாகப் பரவுவதற்கு போதைப் பழக்கமே முக்கிய காரணமாக உள்ளது. 63.7 சதவீதம் பேருக்கு போதை ஊசி போட்டுக் கொண்டதால் இந்நோய் பரவியுள்ளது. 8.1 சதவீதத்தினருக்கு உடலுறவின்போது பரவியுள்ளது. எய்ட்ஸ் நோயாளிகளில் 53.9 வீதமானோர் 20 முதல் 29வயதை உடையவர்கள் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

# ரஷ்ய அதிபரைக் கொல்ல நடந்த சதி முறியடிப்பு

லண்டன்,ஒக்.20

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினைக் கொல்ல நடந்த சதி முறியடிக்கப்பட்டது. இதுதொடர்பாக ரஷ்ய உளவுப்படையின் முன்னாள் உளவாளியை பிரிட்டனில் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

மூத்த பிரிட்டிஷ் அதிகாரியை மேற்கோள்காட்டி 'சண்டே ரைம்ஸ்' இச்செய்தியை வெளியிட்டுள்ளது.

பயங்கரவாத எதிர்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட உளவாளியை மேற்கு லண்டனில் உள்ள பொலீஸ் நிலையத்தில் வைத்து தீவிர விசாரணைகளை பொலீஸ் அதிகாரிகள் நடத்திவருகின்றனர்.

செசனிய தீவிரவாதிகளுடன் அவருக்கு தொடர்பு உள்ளதா என்ற கோணத்திலும் பொலீஸார் விசாரித்தனர்.

முன்னாள் ரஷ்ய உளவு அதிகாரியான அலெக்சாண்டர் லிட்வினகோ, என்பவரே கைதாகியுள்ளார். (ஏ)

# தனக்காகப் பிரார்த்திக்க பாப்பரசர் கோரிக்கை

வத்திக்கான்,ஒக்.20

கடவுள் விரும்பும் வரை ,அவரது விருப்பத்தை நிறைவேற்றும் இறைபணியை நான் தொடர, எனக்காக பிரார்த்தனை செய்யுங்கள் என்று பாப்பரசர் கர்தினால்களிடம் கேட்டுள்ளார்.

இறைபணியில் 25ஆண்டுகளை முடித்ததைக் குறிக்க வத்திக்கானில கடந்த சனிக்கிழமை சிறப்புப் பிரார்த்தனை நடந்தது. அதில் பேசிய போதே கர்தினால்களுக்கு அவர் இந்த உருக்கமான வேண்டுகோளை விடுத்தார்.

அப்போது கர்தினால்கள் உணர்ச்சி வசப்பட்டு எழுந்து நின்று அவருக்கு தங்களுடைய வணக்கத்தையும், ஆதரவையும் தெரிவித்தனர்.

அவரும் மகிழ்ச்சி அடைந்து அவர்களைப் பார்த்து உற்சாகமாக கையை அசைத்து வாழ்த்தினார். பாப்பரசரின் அருளாசியைப் பெற வந்தவர்கள் இந்த உணர்ச்சிகரமான காட்சியில் நெகிழ்ந்தனர்

உலக அரங்கில்



கஜகஸ்தானில் உள்ள பைகானூர் ஏவுதளத்திலிருந்து கடந்த சனிக்கிழமை ஏவப்பட்ட சோயுஸ் டி.எம்.ஏ. 3 ரஷ்ய விண்கலம் புறப்படுவதற்கு முன் பொதுமக்களைப் பார்த்து கையசைக்கும் அமெரிக்க விண்வெளி வீரர் மைக்கல் ஃபோலே, ரஷ்ய வீரர் அலெக்சாந்தர் கலேரி, ஸ்பெயின் வீரர் பெட்ரோ டியூக். இந்த விண்கலம் இன்று சர்வதேச விண்வெளி நிலையத்தை அடையும்.



அன்னை திரேசாவுக்கு புனிதர் பட்டம் வழங்கும் நிகழ்வில் பாப்பரசர்.

# ஆண் எலிகளுக்கு கருத்தடை மாத்திரை!

எலிகளை ஒழித்துக் கட்டும் திட்டம் சீனாவின் ஷங்காய் மாநிலத்தில் ஆரம்பமாகியுள்ளது. இது நீண்டகாலத் திட்டம் என்று அந்த மாநிலத்தின் சுகாதாரத்திற்கு, பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள அதிகாரி தெரிவித்திருக்கிறார்.

குறிப்பாக ஆண் எலிகளை கருத்தடை மாத்திரைகளை உண்ண வைத்து அவைகளின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

எதிர்வரும் மூன்று மாதங்களுக்கு இத்திட்டம் நடைமுறையில் இருக்கும். இதற்கென, பத்துத் தொன் எடையுள்ள கருத்தடை மாத்திரைகள் அங்கு சேமிக்கப்பட்டுள்ளன. ஷங்காய் மாநிலத்தில் மூன்று லட்சம் இடங்களில் எலிகள் உண்பதற்காக இந்த மாத்திரைகள் வைக்கப்பட்டுள்ளன.

தாவர மூலிகைகளில் இருந்து கருத்தடை மாத்திரை தயாரிக்கப்பட்டுள்ளது. இதனால், மாத்திரைகளை உண்ணும் எலிகளின் உயிருக்கு பாதிப்பு ஏற்படாது.

கடந்த காலங்களில் நஞ்சிட்டு எலிகளை சாகடிக்கும் முயற்சி வெற்றி பெறவில்லை. நஞ்சை உண்ட எலிகள் மரணித்தன. ஆனால், இனப் பெருக்கம் குறையவில்லை. எனவே தான் கருத்தடை மாத்திரைகள் கொடுக்கப்படுகின்றன என்கிறார் ஷங்காய் மாநகரசபைப் பணிப்பாளர். எனினும், அங்கு பெண் எலிகளைப் பிடித்து பொல்லால் அடித்து சாகடிக்கும் திட்டமும் தற்போது நடைமுறையில் உள்ளது.

**Web Solution PVT LTD**

| | | |
|---|---|---|
| Domain Registration | - | 1250 |
| Hosting Satistics | - | 4500 |
| Dynamic | - | 7500 |

*For Further Details Please Contact:*

N. Maran
Mobile-0777 69631 2
Email:-
kison52@[illegible].com

(23836) (1217)

உ

# திருமண வாழ்த்து

இல்லறமாம் நல்லறத்தில் இன்று இனிதே இணையும்
புதுமணத் தம்பதிகள்

மணமகன்
திருவளர் செல்வன்
**சிவாஜிலிங்கம்**
(கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர்)

மணமகள்
திருவளர் செல்வி
**மலர்விழி**

இருவரும்
"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"
எனும் வள்ளுவர் வாக்குக்கிணங்க அறங்கள் பலவாற்றி
ஆல்போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி
பதினாறு பேறுகளும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க என்று
உளமார வாழ்த்துகின்றோம்.

கொழும்பு - 13
நண்பர்கள்.

(சி-30902) (25-24-11-18)



# விற்பனைக்கு

அதிநவீன முறையில் பார்மஸி மற்றும் புடவை விற்பனைக்கு உகந்த தேவையான அலுமினிய FITTINGS SHOWCASES COUNTERS விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
060 221 3313
அல்லது
இரவு 8.00 மணிக்குப் பின்னர்
077 - 6103210 என்ற
இலக்கத்துடன்
தொடர்புகொள்ளவும்.

(29-24-11-18) (C/30909)



மனைக்கு வெளியே ஒரு மனை

**ஜோ-எகட்டனின்**
**ஜெசித்தாரா**

வழங்கும்
விசேட குங்குமப்பூ புரியாணி
வழமையான உணவுப் பொதிகளும்
வழமை போல.

**ஜெசித்தாரா விருந்தகம்**
மகளிர் கல்லூரி முன்ஒழுங்கை,
கண்டுக்குழி. யாழ்ப்பாணம்.

(C/30854) (24-18-11)



# தவறிவிட்டது

கடந்த 13.10.2003 அன்று பிற்பகல் 1.15 மணியளவில் 750 இலக்க பாதையூடான பஸ்ஸினுள் ஏறும் போது ஏற்பட்ட நெரிசலில் சேட் பொக்கற்றில் இருந்த என்னுடைய சிறிய பொலித்தீன் பை ஒன்று தவறிவிட்டது. அந்தப் பையினுள் சிறிய பேர்ஸ், பொக்கற் டயறி, தேசிய அ.அ. (இல.291210791V) விசேட அ.அ., பிரஜைகள் குழு அ.அ., சிறு பொக்கற் அல்பம் என்பன இருந்தன. இப்பையைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு அறியத்தரவும்.

மா.தர்மலிங்கம்
"தேவி அகம்"
கரணவாய் கிழக்கு, கரவெட்டி.
☎ 077 6089004

(23824) (25-24-11-18)



# முதலாவது வருட நிறைவு திருமண நாள் வாழ்த்துக்கள்



265. ஆடியபாதம் வீதி நல்லூரைச் சேர்ந்த
திரு.திருமதி சுதாகரன் - அனுசயா

தம்பதிகள் தமது முதலாவது வருட திருமண நிறைவு நாளை இன்று (2003-10-20) திங்கட்கிழமை ஜேர்மனியில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்கள். இவர்களை ஸ்ரீ வாலையம்மன் அருள்பெற்று நீடூழி காலம் வாழ்க என அன்புடன் வாழ்த்துபவர்கள்:

அப்பா, அம்மா, மாமி, மாமா, ஐயா, அம்மம்மா, தம்பி அசோக், தங்கை சகிலா மற்றும் உறவினர், நண்பர்கள்.

தகவல்:அம்பிகைபாகன்.

(23574)(27-11-18)



உ
சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சுபானு வருஷம் ஐப்பசி மாதம் 05 ஆம் நாள் (22.10.2003) புதன்கிழமை முற்பகல் 09.05 மணிமுதல் மதியம் 12.02 மணிவரையுள்ள பூர நட்சத்திரமும், தனு லக்கினமும், சித்தாமிர்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்,

எமது ஏக புத்திரன்
திருவளர் செல்வன்
**நவரட்ணராஜ்**
அவர்களுக்கும்

எமது சிரேஷ்ட புத்திரி
திருவளர் செல்வி
**விஜயலதா**
அவர்களுக்கும்

எல்லாம்வல்ல இறைவன் திருவருள் துணைகொண்டு புதுவளவு இடைக்காட்டில் உள்ள மணமகள் இல்லத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து, மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரும் வண்ணம் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.


இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

திருமதி இராசம்மா ஜெயஇந்திரா,
இடைக்காடு,
அச்சுவேலி.

திரு.குகதாசன்
(ஆசிரியர், ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்),
திருமதி நிர்மலா குகதாசன்,
புதுவளவு, இடைக்காடு, அச்சுவேலி.

(23814) (24-11-18) (இரு வீட்டார் அழைப்பு)


# 45 ஆவது நாள் நினைவஞ்சலி



## அமரர்
## செல்லையா யோகேஸ்வரன்

(அதிபர், புத்தூர் மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை)

அன்னை மடியில்
25—06—1950

ஆண்டவன் அடியில்
06—09—2003

*அன்பின் உறைவிடமே பாசத்தின் ஒளியே*
*நெடிய வையத்துள் வாழ் வழி காட்டினாயே – எம்*
*நெஞ்சத்துள் தெய்வமாய் என்றும் அமர்வாயே!*
*நாற்பத்தைந்து நாளாச்சே நானிலத்தை விட்டு நீர் பிரிந்து*
*நாளும் பொழுதும் நாங்கள் உமை நினைந்தே வாடுகின்றோம்.*

*ஆத்மா சாந்தி அடைய*
*ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

பிரிவால் வருந்தும்:

திருமதி செ.அன்னலட்சுமி (சிறிய தாயார்),

சகோதர, சகோதரிகள்:
இராசேந்திரம் புஸ்பராணி
வைத்திலிங்கம் பரமேஸ்வரி (லண்டன்),
ஆனந்தராசா ஜெயராணி (ஜேர்மனி),
சந்திரகுமார் சேந்தினி,
சுகுமார் கலைக்குமாரி (ஜேர்மனி),
மதன்ராஜ் நிவேதா (பிரான்ஸ்)

மற்றும் பெறாமக்கள், மருமக்கள்.

கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

(23846) (24-11-18)

உதயன்

## ஜனாதிபதி குமாரதுங்க வெளியிடும் குற்றச்சாட்டுகள்

'ரணிலின் அரசு விடுதலைப் புலிகளோடு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டதன் பின்னர், வடக்கு - கிழக்கில் தனிநாடு போன்ற நிலைமை ஒன்றைப் புலிகள் உருவாக்கியிருக்கின்றார்கள். இப்படி குற்றம் சுமத்தியிருக்கின்றார் ஜனாதிபதி குமாரதுங்க.

உலகப் பொருளாதார அமைப்பின் தென்னாசிய மாநாட்டில் உரையாற்றுவதற்காகச் சென்ற ஜனாதிபதி குமாரதுங்க அதன்பின்னர் சிங்கப்பூரில் இடம்பெற்ற சர்வதேச செய்தியாளர்களின் மாநாட்டில் கருத்து வெளியிடுகையிலேயே இப்படிக் கூறியிருக்கின்றார்.

புலிகளுக்கு எதிரான அவர்களது குற்றச்சாட்டுக்களில் முக்கியமான அம்சங்கள் வருமாறு:-

★ கடந்த இரு வருடங்களில் புலிகள் தங்களின் உறுப்பினர் வலுவை ஆறாயிரத்திலிருந்து இருபதாயிரமாக உயர்த்தியுள்ளார்கள்.

★ சுருக்கமாகக் கூறுவதானால் - தனி பொலீஸ், நீதிமன்றம், வங்கி, வரி அறவிடும் முறை ஆகியவற்றை ஸ்தாபித்ததன் மூலம் - தனிநாடு போன்ற நிலைமை ஒன்றையே புலிகள் உருவாக்கியிருக்கின்றார்கள். இதனை அரசு கண்ணை மூடிக்கொண்டு பார்த்திருக்கின்றது.

★ வடக்கு - கிழக்கில் உள்ள ஏனைய சிங்கள, முஸ்லிம் இனங்களுக்கோ, ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கோ இடமேதும் அளிக்காமல் தான் தனித்தே இடைக்கால நிர்வாகத்தை மேற்கொள்ளவேண்டும் என நியாயமற்ற கோரிக்கையைப் புலிகள் வலியுறுத்துகின்றார்கள்.

★ தனிநாட்டுக் கோரிக்கையையோ, ஆயுதங்களையோ கைவிடுவதாக அறிவிக்காத நிலையிலும், ஜனநாயக அரசியலுக்கு வருவதாகப் பிரகடனப்படுத்தி உறுதியளிக்காத நிலையிலும் இடைக்கால நிர்வாகத்தைத் தனித்து தங்களிடம் வழங்கவேண்டும் என புலிகள் இயக்கம் கோருகின்றது.

- இப்படி சர்வதேச மாநாடு ஒன்றில் ஜனாதிபதி வெளியிட்டிருக்கும் கருத்துக்கள் அவர் முழுப்பூசணிக்காயைச் சோற்றில் மறைக்க முயல்கின்றார் என்பதை அம்பலப்படுத்தப்படுகின்றன.

ஒப்பந்தத்திலும் சரி, அதற்கு முன்னரும் சரி, பின்னரும் சரி, தங்களின் ஆயுத வலுவையோ ஆள்பல வலுவையோ அதிகரிப்பதில்லை என்று புலிகளோ, அரசோ அறிவிக்கவில்லை. அதற்கான இணக்கம் ஏதும் காணப்படவில்லை. அதற்கு மாறாக, அரசும் சரி, புலிகளும் சரி தங்களின் ஆள் மற்றும் ஆயுத வலுவை அதிகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பது கண்கூடு. இந்நிலையில் புலிகள் மட்டும் தமது வலுவை அதிகரித்து வருகின்றனர் என ஜனாதிபதி கூப்பாடு போடுவதில் அர்த்தமில்லை.

அமைதி வழியில் தீர்வு காண்பதற்கு கொள்கையளவில் இணங்கியிருக்கும் அரசு, புலிகள் ஆகிய இரு தரப்பினரில் அரசுத்தரப்பு தன்னை ஆயுத ரீதியிலும், ஆள்பல ரீதியிலும் பலப்படுத்த புலிகள் அதைப் பார்த்துக்கொண்டு தம்மைப் பலப்படுத்தாமல் வாளாவிருக்க வேண்டும் என ஜனாதிபதி கனவு காண்கின்றாரா?

புலிகள் ஒப்பந்தத்தின் பின் வடக்கு - கிழக்கில் தனிநாடு ஒன்றை உருவாக்கிவிட்டனர் என ஜனாதிபதி கூறுவது சுத்தப்பொய். புலிகள் புதிதாக உருவாக்கினார்கள் என்று ஜனாதிபதி கூறும் புதிய கட்டமைப்புக்கள் அனைத்துமே ஜனாதிபதி குமாரதுங்கவின் அரசின் காலத்தில் அல்லது அதற்கு முன்னிருந்த அரசுகளின் காலத்தில் உருவாக்கப்பட்ட கட்டமைப்புகளே. அதை மறைத்து - திரித்து - கூறுவதன் மூலம் சர்வதேச சமூகத்தைப் பிழையாக வழிநடத்த முயல்கின்றார் அவர்.

சுருக்கமாகக் கூறுவதானால் சந்திரிகாவின் அரசின் காலத்தில் புலிகளால் ஸ்தாபிக்கப்பட்ட இந்தக் கட்டமைப்புகள் மேலும் விரிவடைந்து 'தனிநாடு' ஒன்று உருவாவதை பிரதமர் ரணில் தலைவர் பிரபாகரனுடன் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தமே தடுத்து - தடை செய்து - அமைதி, சமாதான முறையில் மாற்று வழியில் வேறு தீர்வு ஒன்றைக் காண்பதற்கான பாதையைத் திறந்து விட்டிருக்கின்றது என்பதே உண்மை. இந்த யதார்த்த நிலைமையை மூடிமறைத்து புதுக்கதை விடுகிறார் ஜனாதிபதி.

இடைக்கால நிர்வாகத்தில் ஏனைய இனத்தவருக்கு இடமில்லை என்று புலிகள் எந்தச் சமயத்திலும் கூறவில்லை. இவ்விடயம் தொடர்பாகப் புலிகளின் திட்டவரைவு இன்னும் வெளியாகாத நிலையில் கற்பனையில் குற்றம் சுமத்துகின்றார் ஜனாதிபதி.

தமிழ் மக்களின் அபிலாஷைகளைத் தீர்க்கத்தக்க வகையில் சமஷ்டிக் கட்டமைப்பில் - சுயநிர்ணய உரிமையுடன் கூடிய - தீர்வு தரப்படுமானால் அதை ஏற்கத் தயார் எனப் புலிகள் பகிரங்கமாகவே - எழுத்தில் - அறிவித்துள்ளனர்.

அத்தகைய சமாதானத் தீர்வு அமைதி வழியில் ஏற்படுவதை முண்டுபோட்டுத் தடுத்துவரும் ஜனாதிபதி குமாரதுங்க போன்றோர், அத்தகைய தீர்வைத் தமிழருக்குக் கிட்டாத நிலையில் ஆயுதங்களைத் தமிழர் - புலிகள் - கைவிடவேண்டும் என்று கோருவது, அவர்கள் பகல் கனவு காண்கின்றனர் என்பதையே காட்டுகின்றது. நியாயமான தீர்வை தமிழருக்கு வழங்காமல் ஆயுதங்களைத் தமிழர் கீழே வைப்பார்கள் என்று ஜனாதிபதி நினைப்பாரேயானால் அது வெறும் கற்பனையாகவே முடியும்.

# காலத்தின் பதிவு



என்றோ ஒருநாள் விடியும்..... படம்: பிரேம்

# குடாநாட்டின் அபிவிருத்திப் பணிகளுக்கு பாதுகாப்பு வலயம் தடையாக உள்ளது!

## செயலகக் கூட்டத்தில் துறைசார் பிரதிநிதிகள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.20

குடாநாட்டின் அபிவிருத்திப் பணிகளுக்கு உயர்பாதுகாப்பு வலயம் பெரும் தடையாக அமைந்துள்ளது.

நேற்றுமுன்தினம் யாழ். செயலகத்தில் நடைபெற்ற அடுத்த வருடத்துக்கான குடாநாட்டின் அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பது தொடர்பான ஆய்வுக்கூட்டத்தில் இவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டது.

அடுத்த வருடத்துக்கான யாழ்ப்பாண மாவட்டத்தின் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி தொடர்பான இரண்டாவது செயலமர்வு நேற்றுமுன்தினம் யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல், பிரதேச செயலர்கள், அரச திணைக்களங்களின் தலைவர்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

குடாநாட்டில் அடுத்த வருடத்துக்கான மீளக்குடியமர்வு புனர்வாழ்வு, புனரமைப்பு, கல்வி, சுகாதாரம், மீன்பிடி, விவசாயம், வீதி அபிவிருத்தி, கட்டுமானப்பணிகள், நீர் வழங்கல் போன்ற முக்கியமான துறைகள் குறித்து துறைசார்ந்த திணைக்களங்களின் அதிகாரிகளினால் திட்டங்கள் முன்வைக்கப்பட்டன.

அத்துடன் மிதிவெடி அகற்றல் செயற்பாடு, மக்களின் உள மேம்பாட்டுப் பணிகள், சமூகசேவைப் பணிகள், ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் புனர்வாழ்வு, அபிவிருத்தித் திட்டங்கள், இளைஞர் யுவதிகளுக்கான புதிய வேலைத்திட்டங்கள் என்பனவும் சம்பந்தப்பட்டவர்களால் முன்வைக்கப்பட்டன.

அடுத்த வருடத்துக்கான திட்டங்களை முன்வைத்தவர்களில் பலரும் தமது துறைசார் பணிகளுக்கு உயர்பாதுகாப்பு வலயப் பிரச்சினை பிரதான தடையாக அமையும் நிலை காணப்படுவதாக சுட்டிக்காட்டினர்.

விவசாயம், மீன்பிடி, புனர்வாழ்வு, மீள்குடியமர்வு போன்ற விடயங்களில் உயர்பாதுகாப்பு வலயங்கள் பெரும் தடையாக அமைந்திருப்பதாக கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் பெருமளவான விவசாய நிலங்களில் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகள் இன்னமும் அகற்றப்படாததால் அடுத்த வருடம் விவசாயிகள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டியநிலை நிலவுவதாகவும் கூறப்பட்டது.

இக்கூட்டத்தில் அரச அதிபர் செ.பத்மநாதன் கூறியதாவது:-

இப்பொழுது பல அரசசார்பற்ற நிறுவனங்களினால் குடாநாட்டில் பல மில்லியன் ரூபா பணம் நுண்கருத்திட்டக்கடன்களாக மக்களிடம் சுழன்று கொண்டிருக்கின்றன.

அந்தத் திட்டங்கள் மிகவும் அவசியமானவை. வறிய மக்களின் மேம்பாட்டுக்கு இன்றியமையாதவை.

எனவே, அடுத்த ஆண்டு அத்தகைய கடன் திட்டங்களை மேலும் அதிகரிக்க உரிய தரப்பினர் நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வரவேண்டும் என்றார் அரச அதிபர். (ஒ-4)

## பருத்தித்துறை - சரசாலை வீதியில்

# பாலம் உடைந்ததால் போக்குவரத்து துண்டிப்பு

தென்மராட்சி,ஒக்.20

பருத்தித்துறை - சரசாலை வீதியில் கொம்பிக்குளம் மயானத்திற்கு அருகில் உள்ள பாலம் இடிந்து வீழ்ந்ததால் அந்த வீதி ஊடான போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

பாலத்தின் ஒரு பகுதி ஏற்கனவே உடைந்த போதிலும் கற்கள் போடப்பட்டு மூடப்பட்டு வாகனப்போக்குவரத்து மேற்கொள்ளப்பட்டதாகவும் கடந்த வெள்ளிக்கிழமை முழுமையாக பாலம் உடைந்ததால் போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பாலம் உடைந்ததால் பருத்தித்துறையிலிருந்து சரசாலை ஊடாக சாவகச்சேரிக்கு செல்லும் பஸ் சேவையும் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் சரசாலை, மட்டுவில் பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-1 7)

### நாளை

ஐப்பசி 04.
செவ்வாய்க்கிழமை
(21.10.2003)
திதி : ஏகாதசி
ஏகாதசி விரதம்
பின்னிரவு 1.54 வரை.
நட்சத்திரம் : மகம்
முன்னிரவு: 9.30 வரை.
சுபநேரம்: 11.32 - 12.02
ராகுகாலம்: 03.02 - 04.32
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

வயதில் பெரியவர்களாக இருப்பவர்கள் ஒழுக்கத்திலும் பெரியோராக இருப்பர் என்பது உண்மையன்று.

# சேமிப்புக்கடன் குழுக்களுக்கு இரண்டாம் கட்டக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,ஒக்.20

ஜெயர் நிறுவனத்தினால் குடாநாட்டில் அமைக்கப்பட்டுள்ள சேமிப்புக்கடன் குழுக்கள் சிலவற்றுக்கு இரண்டாம் கட்டக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருப்பதாக அந்த நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வட்டுக்கோட்டை கிழக்கு, மாதகல் கிழக்கு, கட்டுவன் மேற்கு, பெரியவிளான் ஆகிய கிராமங்களில் அமைக்கப்பட்ட கடன்குழுக்களுக்கு தலா 55 ஆயிரம் ரூபாவும் அல்லைப்பிட்டி சேமிப்புக் கடன் குழுவுக்கு 80 ஆயிரம் ரூபாவும் மயிலிட்டி வியாபாரிமூலை சேமிப்புக்கடன் குழுவுக்கு 97 ஆயிரம் ரூபாவும் இரண்டாம் கட்டக் கொடுப்பனவாக வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி கிராமங்களில் உள்ள வறியமக்களின் சுயதொழில் வாய்ப்புகளை அதிகரித்து, அவர்களை வறுமையிலிருந்து விடுவிக்கும் நோக்கிலேயே இக்கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இக்கடன் தொகைகள் சுழற்சி முறைக்கடன்களாக அப்பகுதி மக்களுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (ஒ-4)

# வீட்டில் ஆயுதங்களை பதுக்கிய சிப்பாய் கைது!

கொழும்பு,ஒக்.20

ஆயுதங்களை தனது வீட்டில் மறைத்து வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் இராணுவச் சிப்பாய் ஒருவர் அநுராதபுரம் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அநுராதபுரத்தைச் சேர்ந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் வீட்டில் ஆயுதங்கள் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக தகவல் கிடைத்ததை அடுத்து அநுராதபுரம் பொலீஸார் தேடுதலை நடத்தி ஆயுதங்களை மீட்டுள்ளார்கள்.

ஆயுதங்களை வைத்திருந்த இராணுவச்சிப்பாய் பல கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்றும் -

இவருடன் சேர்ந்து இயங்கும் குழுவொன்று இருக்கின்றமை விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாகவும் -

அநுராதபுரம் பொலீஸார் தெரிவித்துள்ளார்கள்.(ஒ-6-12)

CALTEX

# கல்டெக்ஸ் வீதியோரக் கண்காட்சி

இதோ, எஞ்ஜின் ஒயில்கள், பிறேக் ஒயில்கள் முதலியன பற்றி அறிந்துகொள்ள உங்களுக்குச் சிறந்ததோர் வாய்ப்பு. கல்டெக்ஸ் நிபுணர்கள் பின்வரும் திகதிகளில் உங்களைத் தேடி வருவார்கள்:

- ஒக்ரோபர் 20 - நெல்லியடி, பருத்தித்துறை.
- ஒக்ரோபர் 21 - சுன்னாகம், திருநெல்வேலி.
- ஒக்ரோபர் 22 - யாழ். நகர்.

## உங்கள் வாகனத்தின் பிறேக் ஒயில் நிலமையை அவ்விடத்திலேயே பரிசோதிக்கலாம்.

நீங்கள் கல்டெக்ஸ் பொருட்களை வாங்கினால் மகத்தான பரிசுகளை வெல்லும் வாய்ப்பும் கிடைக்கும்.

மேலதிக விபரங்களுக்கு சக்தி எப்.எம். வானொலியைக் கேளுங்கள் அல்லது (021) 2226147 என்ற உடனடித் தொலைபேசி இலக்கத்தில் எமது வாடிக்கையாளர் சேவைப் பிரிவுடன் தொடர்புகொள்ளுங்கள்.

*இந்த அரிய வாய்ப்பை தவறவிடாதீர்கள்!*



# கோல்டன் ஈகிள் பாதுகாப்பு சேவை

வெற்றிடங்கள்:-

- கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்
- பாதுகாவலர்கள்
- காரியாலய உதவியாளர்

**i) கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்**
**Junior Security Officers**

தகைமைகள்:
- க.பொ.த (சா/த.) சித்தி
- உயரம்:- 5' 4"
- மார்பு:- 32"
- வயதெல்லை:- 20 தொடக்கம் 55 வரை

(ஓய்வுபெற்ற பொலீஸ்/படை உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை)

**ii) பாதுகாவலர்கள்:-**
**Patrol Men**

தகைமைகள்:-
- எட்டாம் வகுப்புச் சித்தி
- உயரம்:- 5' 2"
- மார்பு:- 31"
- வயதெல்லை 25 தொடக்கம் 50வரை

**iii) காரியாலய உதவியாளர்**
**Office Assistant:-**

தகைமைகள்:-
- ஆண்டு எட்டு சித்தி
- வயதெல்லை:25 தொடக்கம் 45 வரை

**பொதுவான தகைமைகள்:-**
நல்ல தேகாரோக்கியமும், நல்ல கண்பார்வையும் இருத்தல் வேண்டும்.

**iV) நேர்முகப் பரீட்சை:-**
22.10.2003- புதன்
23.10.2003 - வியாழன் } பி.ப. 4.30மணி தொடக்கம் பி.ப. 6.00மணி வரை
25.10.2003 சனிக்கிழமை காலை 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 1.00 மணிவரை.

**V) தேவைப்படும் ஆவணங்கள்:-**
- கிராம அதிகாரியின் நற்சான்றிதழ்
- பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
- தேசிய அடையாள அட்டை
- பாடசாலை நற்சான்றிதழ்

இல. 43, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.
(யாழ். இந்து மைதானம் முன்பாக)

பணிப்பாளர்

(சி-30875)

(25-13-16)


# 45ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்




அதிபர், புத்தூர் மெதடிஸ் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை

சீரோடு சிறப்புற வாழவைத்த சீராளன்
சீவனாய் உயிர்ப்புற உருத்தந்த உத்தமன்
பார்போற்றும் பள்ளியின் பாலரைக் கண்டு
பால்போல முகம்மலர்ந்து பக்குவப் படுத்தினீர்!

கொக்குவில் பதியில் குலமகன் எழுந்து
பக்குவப் பணியால் பற்பல செய்து
தத்துவ மணியால் தரணியில் விளங்கி
எப்பணி யாற்ற எங்கு சென்றீர்?

ஈஸ்வரன் நாமத்தில் முடிபெயர் கொண்டு
பாசத்தின் நாமத்தால் நால்வரைப் பெற்று
பள்ளியில் பல்கலை கற்பிக்க வைத்த
பண்பாளன் பாரினில் இன்று இல்லையே!

உத்தமர் நீங்கள் மறைந்து விட்டாலும்
உம்பணி போற்ற உரமாக நிற்போம்
எம்பணி கண்டு மகிழ்ந்து கொள்ள
இனியொரு பிறவி எடுத்து வருக!!!

இன்று (20.10.2003) திங்கட்கிழமை அவரது ஞாபகார்த்தமாக அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"ஆனந்தவாசா"
03ஆம் கட்டை, கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால்
வருந்தி நிற்கும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்.

# ஜே.வி.பி. முத்திரையைக் குத்தி போராட்டங்களை நசுக்கும் அரசு!

**ஜனநாயக வழியில் செயற்படுவதாகக் கூறும் நாடுகளில் குறிப்பாக இந்தியா மற்றும் இலங்கையில் தொழிலாளர்கள், ஊழியர்கள் வேலை நிறுத்தங்களில் இறங்கும்போது நசுக்கப்படுகிறார்கள். இது குறித்து சுனந்த தேசப்பிரிய எழுதிய ஆக்கத்தின் தமிழ் வடிவம் இது.**

சுகாதார சேவை ஊழியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற அரசு முன்வந்ததையடுத்து, அவர்களால் சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்ட வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது. இச்சுகாதார சேவை ஊழியர்களின் தொழிற்சங்கங்களின் ஒன்றுபட்ட பலமே இதற்கான காரணமாகும். 1980 ஆம் ஆண்டில் இடம்பெற்ற வேலைநிறுத்தத்தின் பின்னர் பெரிய அளவிலான வேலைநிறுத்தமெதுவும் இடம்பெறவில்லையாயினும் இந்த சுகாதார சேவை ஊழியர்களின் வேலைநிறுத்தம் அது போன்றதொன்றாக அமைந்தது. ஆண், பெண் இருபாலாரையும் உள்ளடக்கிய 60 ஆயிரம் ஊழியர்கள் இந்த வேலைநிறுத்தத்தில் இணைந்து கொண்டனர். அவர்களது கோரிக்கைகள் நியாயமற்றவையென அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள்கூடக் கருத்து வெளியிடவில்லை.

சுகாதார சேவை ஊழியர்களது சம்பளத் திட்டங்களில் காணப்படும் முரண்பாடுகள் மீளாய்வு செய்யப்படுதல் அவசியமென்பதை எந்தவொரு அதிகார வர்க்கத்தினராலும் மறுக்க

**வீயெஸ்ரீ**


முடியாது. ஒரு பிரிவினரின் சம்பளத்தை அதிகரிக்கும் அதேவேளை மற்றொரு பிரிவினருக்கு சம்பள அதிகரிப்பு வழங்காதிருப்பதற்கு எதுவித காரணமும் இருக்கமுடியாது. ஆனால், இந்த ஊழியர்களின் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வுகாண்பதை விடுத்து, அரசு இவ்வேலைநிறுத்தத்துக்கான பொறுப்பை ஜே.வி.பி. மீது சுமத்துவதற்கு முயற்சித்தது. இவ்வேலைநிறுத்தத்தை ஒழுங்கு செய்ததன் மூலம் ஜே.வி.பி. அரசுக்கெதிராகச் சதியில் ஈடுபடுவதாக அமைச்சர்களில் பலர் கருத்து வெளியிட்டனர்.

உண்மையிலேயே ஜே.வி.பி. கொண்டிராத ஆற்றலை அது கொண்டுள்ளது என்பதை நிலைநிறுத்த அரசு முயற்சித்தது. மற்றொருவகையில் வேலைநிறுத்தத்தை ஒழுங்கு செய்யும் உரிமை ஜே.வி.பிக்குக் கிடையாதென அரசு கருதுவதாக அர்த்தம் கொள்ளமுடிகிறது. இருப்பினும், ஜே.வி.பி. சம்பந்தப்படும் எவ்விடயமாகினும் அது முடிவில் யாவற்றையும் நாசமாக்குவதாகவே அமையுமென்ற ஒரு தோற்றத்தை உருவாக்கும் முயற்சியாகவே இது இருக்கக்கூடும்.

இவ்வாறு ஜே.வி.பி. மீது பழி சுமத்தி, சட்டத்தின் மூலம் வேலைநிறுத்தத்தை நசுக்கித் தோற்கடித்துவிட முடியுமென அதிகார வர்க்கம் கருதியிருக்கக்கூடும். "இது உண்மையில் கோரிக்கைகளை வென்றெடுக்கும் நோக்கிலான முயற்சியல்ல. அரசின் செயற்பாடுகளைத் திட்டமிட்டுக் குழப்பும் நோக்கம் கொண்டது. அவர்களது அவ்வித நோக்கத்துக்கு இடமளிக்காது, அம்முயற்சியை முறியடிக்கவேண்டும்" என அரச தரப்பினர் வாதாடினர். இவையாவும் ஜே.வி.பியினரின் வேலை என்றதொரு தோற்றத்தை உருவாக்கி எந்தவொரு நியாயமான போராட்டத்தையும் நசுக்கிவிடலாம் என்றோ அல்லது அச்சுறுத்த முடியுமென்றோ அரசு எண்ணியிருக்கக் கூடும்.

புத்தியுள்ள அமைச்சர்கள் முதலில் பேச்சுமூலம் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயற்சியெடுத்திருக்க வேண்டும். அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் வெளியிட்ட கருத்துக்கள் போன்று இவ்வேலைநிறுத்தம் ஜே.வி.பியின் தூண்டுதலின் பேரில் ஆரம்பிக்கப்பட்டிருந்தால், தற்போது ஜே.வி.பிக்கே வெற்றிக்கான பெருமை சென்றடைகின்றது.

ஆனால், இதற்கு முற்றிலும் மாறுபட்ட வகையிலேயே சம்பவங்கள் நடந்தேறியுள்ளன. இவ்வேலைநிறுத்தத்தை ஏற்பாடு செய்த முன்னணியில் பல தரப்பினர் இணைந்திருந்தனர். அதேபோன்று அவர்களிலெவரும் தீவிர ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்றிருக்கவில்லை. ஆனால், அரசின் சார்பாக செய்தி வெளியிடுவோர் செய்திகளைத் திரிவுபடுத்தி முக்கிய வேளையில் ஜே.வி.பியினர் அரசின் முயற்சிகளைக் குழப்பியடிப்பதாக நாட்டுமக்களுக்குச் செய்திகளை வெளியிட்டனர். அரசுக்கு ஆலோசனை வழங்குவோருக்கு பரந்த தூரநோக்கு அவசியமாகும். இச்சமாதான நடவடிக்கைகளில் விரிவான வகையில் சகல சக்திகளையும் ஒன்றிணைத்து அரசின் அடிப்படைக் கொள்கைகளை நிறைவேற்றுவதற்காக இந்த ஆலோசகர்கள் பரந்த நோக்குடன் செயற்படல் வேண்டும். இந்த விதத்தில் பிரச்சினைகளில் தாக்கத்தை பரந்த அடிப்படையில் அலசி ஆராய்ந்து முடிவு மேற்கொள்ளப்படுமாயின் அது நிச்சயம் வெற்றியளிக்கும்.



சுகாதார சேவை ஊழியர்களின் வேலைநிறுத்தம் மட்டுமன்றி, புகையிரத சேவை ஊழியர்களது வேலை நிறுத்தமும் அரசை நலிவுறச்செய்யும நோக்கில் அரசியல் கட்சிகளால் ஒழுங்கு செய்யப்பட்டவையாகவே வெளிப்படுத்தப்படுகின்றன.

இவ்வேலைநிறுத்தங்களுக்குப் பின்னணியில் செயற்பட்ட பொறுப்பு ஜே.வி.பியின் கணக்கிலேயே பற்றெழுதப்பட்டுள்ளது. அரசினால் இலேசாக அப்பொறுப்பை ஜே.வி.பியின் தலைமையில் சுமத்தச் சந்தர்ப்பம் வாய்த்திருப்பதன் காரணமாக அவ்விதம் அரசு குற்றம் சுமத்த முயல்கிறது. வேலைநிறுத்தத்துக்கான காரணங்களை ஏற்று அதற்கான தீர்வை வழங்கக்கூடிய வகையிலமைந்த அடிப்படைத் திட்டங்களோ அல்லது புதிய அணுகுமுறையோ அரசிடம் ஒரு போதும் இருந்ததில்லை.

ஒருவேளை தற்போது இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஆசிரிய தொழிற்சங்கங்கள் கிளர்ந்தெழுந்து ஆர்ப்பாட்டத்தில் இறங்க முயன்றால் அதற்கும் இவ் ஜே.வி.பி என்ற முத்திரை குத்தப்படுவதற்கும் எதிர்வரும் நாள்களில் சந்தர்ப்பமுண்டு. அரசுக்கு நெருக்குதலளிக்கும் நோக்குடன் ஆசிரிய சமூகம் தமது கோரிக்கைகளை முன்வைக்கவில்லை என்பதை அரசு நன்கறியும். ஆனால், அரசுக்கு நலிவேற்படுத்தும் நோக்கில் இவ்வித முயற்சிகள் ஆரம்பிக்கப்படுவதாக அரசு எண்ணக்கூடும். இவ்விதம் அதிகாரத்திலுள்ள அரசியல்வாதிகள் கனவு உலகத்தில் சஞ்சரிக்க ஆரம்பித்துள்ளனர். இந்நோய் தீவிரமடைந்தால் அதற்கு மாற்று மருந்தேதும் கிடையாது.

பல்கலைக்கழக மாணவர்களது சகல பிரச்சினைகளுக்குமான பொறுப்பை ஜே.வி.பியின் தலையில் சுமத்தும் பழக்கம் தற்போது வழக்கமாகிவிட்டது. ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு மகாபொல உதவிநிதி வழங்கப்படாததால் உருவான பிரச்சினைக்கு அதற்கான நியாயமான தீர்வொன்றினை வழங்குவதற்குப் பதிலாக, சண்டித்தனப் பேச்சுக்களால் - மாணவர்கள் மீது வசைபாடுவதால் எவ்வித பலனும் கிட்டப்போவதில்லை. அவர்களது நியாயமான சிரமங்களைப் புரிந்து கொண்டு அதற்குப் பரிகாரம் வழங்கத்தவறுவதால், அவர்கள் மத்தியில் வன்முறை உணர்வுகள் தலையெடுப்பதற்கு அது காரணமாகின்றது.

கடந்தகாலம் முழுவதும் ஒன்று மாறி ஒன்றாக தொழிலாள வர்க்கத்தினரின் போராட்டங்கள் தலைதூக்கியமைக்கு, அவர்கள் மத்தியில் காணப்பட்ட பொருளாதாரப் பிரச்சினையே காரணமாகும். தமது அமைச்சின்கீழ் பணியாற்றும் ஊழியர்களின் பிரச்சினைகளுக்கு அமைச்சர்கள் திறைசேரி மீது பொறுப்புச் சுமத்துகின்றனர். மாதக் கடைசியில் தமது தேவைக்குப் போதாத குறைந்த சம்பளம் பெறும் தொழிலாளர்களை இச்சாட்டுப்போக்குக் கதைகளால் திருப்திப்படுத்திவிடமுடியாது. அவர்களது பிரச்சினைகளை இன்னொருவரின் தலைமீது சுமத்திவிட முடியாது. எந்தவகையிலாவது அவர்களது சிரமங்களுக்குத் தீர்வு அவசியமாகும். தொழிலாள வர்க்கத்தினரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த ஆவன செய்வதற்குப் பதிலாக - அவர்களது பிரச்சினைகளைப் பேசித் தீர்வுகாண்பதற்குப் பதிலாக - ஜே.வி.பியைப் பூதமொன்றாக உருவகப்படுத்திக் காட்டி, பொதுமக்களை அச்சமுற வைக்கும் அணுகுமுறையைக் கடைப்பிடிக்கும் அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களின் நடவடிக்கைகள் பொதுமக்கள் மத்தியில் தாமே தமது மதிப்பையும் ஆதரவையும் இழக்க வைக்கும் செயலாகும். இவ்வாறான கருத்துக்களுக்கெல்லாம் பொதுமக்கள் ஏடுபடப்போவதில்லை. இது கடந்த காலங்களில் செயற்றிறனற்ற அமைச்சர்கள் மீண்டும் மீண்டும் பல தடவைகள் கடைப்பிடித்து வந்த அணுகுமுறையாகும். இவ்விடயத்துக்கு அரசின் நிலைப்பாட்டின் மற்றொரு பக்கமும் உள்ளது. அது எவ்விதத்திலும் ஜே.வி.பியின் ஜனநாயக உரிமைகளை மட்டுப்படுத்த முயற்சிப்பது எனக் கருதமுடியும்.

1983 ஆம் ஆண்டின் ஆரம்ப கட்டத்தில் நாடாளுமன்ற ஜனநாயக அரசியல் வழிமுறைக்குள் பிரவேசித்த ஜே.வி.பியை, பயங்கரவாளவர்களென பொதுமக்களுக்கு காட்டிக் கொள்ள விழையும் அரசின் அணுகுமுறை காரணமாக தெரிந்துகொண்டோ அல்லது தெரியாமலோ மீண்டும் வன்முறை வழியை நாடவைக்கும் ஒரு நடவடிக்கையெனக் கருதமுடியும். 1983 ஆம் ஆண்டில் தமிழ் மக்களுக்கெதிரான கலவரத்துடன் ஜே.வி.பிக்கு எவ்வித தொடர்பும் இருக்கவில்லை. உண்மையில் அவ்வேளையில் அரச அதிகாரத்திலிருந்த ஐ.தே.கட்சி அரசியல்வாதிகளே அக்கலவரத்தின் பின்னணியில் இருந்தனர். ஆனால், அரசு அக்கலவரத்துக்கான பொறுப்பை ஜே.வி.பி. மீது சுமத்தியது. அதன் பலாபலன் பயங்கரமானதொன்றாக அமைந்தது.

1981 ஆம் ஆண்டுமுதல் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித்தேர்தல் ஆகிய தேர்தல்களில் பங்குபற்றியதன் மூலம் நாடாளுமன்ற அரசியல் வழிக்குத் திரும்பியிருந்த ஜே.வி.பி., 1982 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட அபிப்பிராய வாக்கெடுப்பு காரணமாகவும் 1983ஆம் ஆண்டில் ஜே.வி.பி. மீது கொண்டுவரப்பட்ட கட்சித் தடை காரணமாகவும் மீண்டும் ஆயுதப் போராட்ட வழிக்குத் திசை திருப்பப்பட்டது. ஜே.வி.பி. ஜனநாயக அடிப்படையிலான அரசியல் நடவடிக்கைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதற்கான வாய்ப்புகள் வழங்கப்படவேண்டியது அத்தியாவசியமாகும். ஜே.வி.பியைப் பயங்கரமானவர்களாகக் காட்டிவந்த அரசின் முன்னைய தவறான அணுகுமுறை மீண்டும் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படுவதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டியது அவசியமாகும்.

தொழிலாள வர்க்கத்தினரின் நியாயமான பிரச்சினைகளை, அவை ஜே.வி.பியினரால் மேற்கொள்ளப்படும் சதிப் புரட்சியென வெளிக்காட்டி, ஜே.வி.பியை தூர விலக்கி வைத்து, அதன் ஜனநாயக உரிமைகளைக் கட்டுப்படுத்த முயற்சிப்பதன் மூலமோ அல்லது ஜே.வி.பி. குறித்து அச்சத்தை உருவாக்க முயல்வதன் மூலமோ ஒரே கல்லெறியில் இரண்டு மாங்காய்களை வீழ்த்தும் முயற்சியாக அமைந்தபோதிலும், அது நாட்டின் ஜனநாயகத்தின் எதிர்காலத்துக்கு ஆரோக்கியமான அறிகுறியாக அமையப் போவதில்லை. ✦

# பயனாளிகள் எண்ணிக்கை அதிகரிக்கிறது ஆனால் உதவிகள் முழுமையாக இல்லை!

## அரசசார்பற்ற இணையப் பிரதிநிதி விசனம்

யாழ்ப்பாணம்,ஒக்.20

யாழ். மாவட்டத்தில் உதவித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்கள் பயனாளிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதில் குறியாக உள்ளன. ஆனால், தேவைப்படும் உதவிகளை முழுமையாக வழங்க அவை பின்னடிக்கின்றன.

- இவ்வாறு கடந்த சனிக்கிழமை யாழ். செயலகத்தில் நடைபெற்ற 2004 ஆம் ஆண்டிற்கான யாழ். குடாநாட்டுத் திட்டங்கள் தயாரிப்பதற்கான ஆராய்வுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத்தெரிவித்த அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதியான பி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் அடுத்த வருடம் யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி, புனர்வாழ்வு மற்றும் அத்தியாவசிய நடவடிக்கைகளை எவ்வாறு பயனுள்ள முறையில் மேற்கொள்வது என்பது தொடர்பாக துறைசார் நிபுணர்கள் கருத்துரை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில் விக்னேஸ்வரன் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:-

புனர்வாழ்வு, புனரமைப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது மிகவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுவதில்லை. சில பிரதேசங்களுக்கு கூடுதலான உதவிகளும் சிலவற்றுக்கு குறைந்த உதவிகளும் வழங்கப்படுகின்றன. திட்டங்களை அமுல்செய்யும் நிறுவனங்கள் பயனாளிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க விரும்புகின்றனவே தவிர தேவையான, முழுமையான உதவிகளை வழங்க பின்னடிக்கின்றன.

சர்வதேச, தேசிய நிறுவனங்கள் தயாரிக்கும் திட்டங்கள் பிரதேச அபிவிருத்தியை உறுதி செய்வதாக அமைய வேண்டும். அத்துடன், திட்டங்கள் கிள்ளித்தெளிக்கும் வகையானவையாக அமையக்கூடாது. மாவட்ட மக்களின் அவசிய தேவைகளைக் கருத்திற்கொண்டு வகுக்கப்பட்ட நியமங்களுக்கு ஏற்ப அவை செயற்பட வேண்டும். திட்டங்களை அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய வள அறிஞர் குழு நன்கு பரிசீலனைசெய்து அரச அதிபருக்கு சிபார்சு செய்தல்வேண்டும். மாவட்டத்தில் இயங்கும் அங்கீகரிக்கப்பட்ட தொண்டு நிறுவனங்களின் பங்களிப்புடனேயே திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். திட்டங்களை நேரடியாக அமுல்செய்வதற்கு விசேட அங்கீகாரம் பெறப்படல்வேண்டும்.

உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு மக்களின் தொடர்பு இருப்பதனாலும், அனுபவம் இருப்பதனாலும் பொருத்தமான பயனாளிகளைத் தெரிவுசெய்ய இந்நிறுவனங்களைப் பயன்படுத்தமுடியும்.

திட்டங்கள் தொடர்பான மதிப்பீடுகளையும் அதனை அமுல் செய்யும் நிறுவனங்களே மேற்கொள்கின்றன. இது திருப்தியற்றதாக உள்ளது. சுதந்திரமான, திறமைசாலிகளைக் கொண்ட ஒரு குழுவினரால் மக்கள் பங்களிப்போடு திட்டங்கள் மதிப்பீடு செய்யப்படவேண்டும். இதற்குரிய கட்டமைப்பு உருவாக்கப்படும் வரை அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் இப்பணியைப் பொறுப்பேற்று செய்தல்வேண்டும் - என்றார். (ஓ-8;)

SALE மகாநதியின் தீபாவளிப் பரிசு

புத்தம் புதிய டிசைன்கள்

விதம் விதமான வர்ணங்கள்

விதம் விதமான ஆடைகள்

வாருங்கள்!

SALE

மகாநதி புடைவையகம்

இல.16, நவீன சந்தை, யாழ்ப்பாணம். ☎021 222 2552

இல.04, நவீன சந்தை, சாவகச்சேரி. ☎0712 370437

சாறி பிளவுஸ் பீஸ் வகைகளுக்கு பிரத்தியேகக் காட்சி அறை:

இல.16, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.



Acer/BenQ கணனி பொருள்கள் விசேட விலைகளில்



10500/-

17" Monitor 2-3 Years Warranty 15600/-

15" Monitor 2-3Years Warranty

6950/-

2650/-

CD.ROM 1 Year Warranty

CD.WRITER 1 Year Warranty

35/- BLANK CD

ஏக விநியோகஸ்தர்கள்:

MICRO PC SYSTEMS

175/3 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P: 222 5893

முகவர்களுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்



இன்று முதல் யாழ்ப்பாணத்தில்.....

வனிதையரை வசீகரிக்கும்...

தரமான கொட்டன் சாரிகள்

# கலாஞ்சலி சாரீஸ்

இன்று [20.10.2003] நண்பகல் 12.30 மணிக்கு

**Mr.S.Raveendra** & **Mrs. Krishanthy Raveendra**

முகாமையாளர் கொமஷல் வங்கி யாழ். சிரேஷ்ட விரிவுரையாளர் - நடனத்துறை

அவர்களினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இல.169,
சேர். பொன் இராமநாதன் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
(யாழ். பல்கலைக்கழகத்திற்கு அருகில்).



வனிதையர் அதிகமாக விரும்பும் காஞ்சி, பெங்கால், மதுரை, விலேஜ் மங்களகிரி கொட்டன் சாரிகள்.

இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் இருந்து தெரிந்தெடுக்கப்பட்டவை.

கலாஞ்சலி சாரீஸ்

169, சேர். பொன் இராமநாதன் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
(யாழ். பல்கலைக்கழகத்திற்கு அருகில்).

மீசான் சபயர் கோர்ட்,
5/6 41, 42 ஆவது ஒழுங்கை, கொழும்பு - 6.

தொ.பே: 0777 - 309983

(24-18-16) "தோல்வி என்பது நிலையல்ல, வெற்றி என்பது முடிவல்ல" (23847)


## மரண அறிவித்தல்

### திருமதி அப்புத்துரை சரசுவதி

கொக்குவில், நந்தாவில் அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது கொழும்பை வதிவிடமாகக் கொண்டவருமான திருமதி அப்புத்துரை சரசுவதி அவர்கள் 17.10.2003 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா அப்புத்துரையின் அன்பு மனைவியும் பூபாலசிங்கம் (இராமநாதன் மகளிர் கல்லூரி, கொழும்பு), ஞானேஸ்வரன் (U.K), மகேந்திரன் (பிரான்ஸ்), குணேஸ்வரன் (பிரான்ஸ்), பாலசுப்பிரமணியம் (U.K), தவமணிதேவி, இராசேஸ்வரி (இந்தியா), சிவலோகதெங்கா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் காராளசிங்கம் (இளைப்பாறிய சுகாதாரப் பரிசோதகர்), குலசிந்தாமணி (இளைப்பாறிய தபாலதிபர்), சதானந்தம் (கனடா), தனலஷ்மி (சிறுப்பிட்டி), சகுந்தலா (U.K), இராஜலஷ்மி (பிரான்ஸ்), யோகினி (பிரான்ஸ்), ரூபி (U.K) ஆகியோரின் அன்பு மாமியாரும் நடராசாவின் (இளைப்பாறிய தபாலதிபர்) சகோதரியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (20.10.2003) திங்கட்கிழமை பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2.00 மணிக்கு கனத்தை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

44, Mews Street Col-2.
Tel.: 2314339

தகவல்:
அ.பூபாலசிங்கம்
(மகன்).

(23843) (24-18-16)


உங்கள் திருப்தியில் ஒரு வருட நிறைவு கண்டு இன்று இரண்டாவது ஆண்டில் காலடி வைக்கும்

புதுமையும் பொலிவும் எழிலும் மிக்க முற்றிலும் குளிரூட்டப்பட்ட அற்புதமான உணவகம்

# PALM BEACH RESTAURANT

## Multi Cushion Veg. / Non Veg. Restaurant

PBR




சைவ, அசைவ உணவுகள்!
இந்திய சமையல் வல்லுநர்களின்
கைவண்ணம்!! தினம் தினம் புதுவகை
உணவுகள்! நல்லருசி! நிறைந்த தரம்!
ஒரு முறையல்ல
ஒவ்வொரு தினமுமே
ருசித்து மகிழுங்கள்.



பிறந்தநாள் விழாவா? திருமண நிகழ்வா?
விருந்துபசார வைபவங்களா? அனைத்து நிகழ்வுகளுக்கும்.....

10/11, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 222 - 6634

இன்று தனது இரண்டாவது ஆண்டில் காலடிவைக்கும் அதேவேளை தனது கிளையினை

169, சேர் பொன் இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலும்
(யாழ். பல்கலைக்கழகத்துக்கு அருகில்) ஆரம்பிக்கின்றது என்பதனை மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.

(சி-30912) (24-18-16) T.P.: 0777 - 178493 - நிர்வாகம்.

# ஆசிரியர்கள் கண் திறந்தால் விடுதலை விரைவு பெறும்!

## ஆசிரியர் தின நிகழ்வில் இளம்பரிதி தெரிவிப்பு

வலி.வடக்கு,ஒக்.20

சமூகத்தின் கண்களாக விளங்குபவர்கள் ஆசிரியர்கள். அவர்களது கண்கள் திறக்கப்பட்டால் எமது விடுதலை விரைவுபெறும்.

மேற்கண்டவாறு யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி குறிப்பிட்டார்.

சர்வதேச ஆசிரியர் தினத்தை யொட்டி வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் தலைமையில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய இளம்பரிதி மேலும் தெரிவித்ததாவது:-

சமூகத்தின் அசைவியக்கத்தை தீர்மானிப்பது பாடசாலைகளும் அவற்றின் அதிபர்களும் ஆசிரியர்களுமே. இதனை உணர்ந்து அவர்கள் செயற்படவேண்டும்.

வாழ்வின் மேன்மை என்பது வீரத்தின் மேலான வெளிப்பாடாகவே இருக்கின்றது. வீரம் இருக்கும் சமூகத்தில்தான் கல்வியும் செல்வமும் இருக்கும்.

இந்த வகையில்தான் மாணவர்களாக இருந்தவர்கள் பலர் போராளிகளாக விடுதலைப் போராட்டத்தில் இணைந்துகொண்டனர்.

இன்று நாளுக்கு நாள் பல மாற்றங்கள் அரசியல் மற்றும் இராணுவ ரீதியாக இடம்பெற்றுக்கொண்டே இருக்கின்றன.

எமது தலைவரை ஒரு விடுதலைப் போராளியாக மாற்றியதில் அவருக்கு கற்பித்த ஆசிரியருக்கும் பங்குண்டு. அந்த ஆசிரியர் அன்று காட்டிய வழிகாட்டலே தமிழன் தலைநிமிர்ந்து நிம்மதியான வாழ்க்கைக்கு செல்வதற்கு இன்று வழிகாட்டியுள்ளது.

விடுதலை என்பதே விரைவில் எட்டவேண்டுமாக இருந்தால் ஆசிரியர்களுடைய கண்கள் திறக்கப்பட வேண்டியது அத்தியாவசியமாகும். இதனையே இன்று தமிழ் சமூகமும் வேண்டி நிற்கின்றது என்றார் அவர்.

சர்வதேச ஆசிரியர் தினத்தை யொட்டி தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை நடத்திய தமிழ்மொழி எழுத்தாக்கல்திறன் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான சான்றிதழ்கள், பதக்கங்கள் என்பவற்றை இளம்பரிதி இந்நிகழ்வில் வழங்கினார். (ஒ-86)

# ஒரு பாடசாலையின் பொற்காலம் என்பது மாணவர் செயற்பாட்டாலேயே உருவாகிறது!

## வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவுறுத்து

தெல்லிப்பழை,ஒக்.20

ஒரு பாடசாலையின் பொற்காலம் என்பது அக்கல்லூரி மாணவர்களின் செயற்பாடுகளாலேயே உருவாக்கப்படுகிறது. அதிபர், ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டாலும் அதனை மாணவர் சமுதாயம் பயன்படுத்தி பயன்பெறாது விட்டால் எந்தப் பாடசாலையும் முன்னேறமுடியாது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் இடம்பெற்ற பரிசுத் தின நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒரு மாணவனுக்கு அனுபவசாலிகளைப் போற்றுகின்ற, பெரியோரை மதிக்கின்ற மனப்பாங்குகள் இருக்க வேண்டும். அத்தகைய மாணவனே ஓர் ஆசிரியரிடமிருந்து முழுமையான பயனைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

இன்று எதையும் எதிர்ப்புணர்வுடன் நோக்குகின்ற - தம்மைத் தாமே பெரியவர்கள் எனக் கருதிக்கொள்கின்ற - மாணவர் குழுக்கள் பாடசாலைகளிலே உருவாகி வருகின்றன. இது ஒரு பாடசாலையின் வளர்ச்சிக்கோ சமூக வளர்ச்சிக்கோ நல்லதல்ல. இதனாலேயே இன்றைய பாடசாலைகளின் கல்வித் தரம் வீழ்ச்சியடைந்து வருகிறது.

கடந்த காலங்களில் கடின உழைப்பும், பணிவும் கொண்ட தரமான மாணவர்களையும் பெற்றோர்களையும் கொண்டிருந்த யாழ்ப்பாணத்தின் பல்வேறு கல்லூரிகள் பொற்காலங்களை உருவாக்கியிருக்கின்றன.

இதேசமயம் சில பாடசாலைகளில் மாணவரை நல்வழிப்படுத்துவதற்காக ஆசிரியர்கள் சில தண்டனைகளை வழங்குகின்றனர். இதனை மாணவர்களும் பெற்றோர்களும் ஏற்றுக்கொள்ளாது பாடசாலை நிர்வாகங்களோடும், ஆசிரியர்களோடும் முரண்படுகிறார்கள். இது மாணவரின் நற்பாங்கு வளர்ச்சியினைத் தடுக்கும் செயலேயாகும். எனவே, பெற்றோர்கள் ஆசிரியர்களோடு ஒத்துழைத்தாலேயே நல்ல மாணவர் சமுதாயத்தை உருவாக்க முடியும் என்றார் அவர்.

அதிபர் புண்ணியசீலன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் 'யூனியன்' சிறப்பு மலரும் வெளியிட்டு வைக்கப்பட்டது. மலரை கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் வெளியிட்டு வைக்க முதற் பிரதியை வைத்திய கலாநிதி ருக்மணி உதயகுமார் பெற்றுக்கொண்டார். (ஒ-150)

# தேசிய தமிழ்த் தினப் போட்டிகளில் வடக்கு - கிழக்கு மாணவர் அபாரம்

திருகோணமலை,ஒக்.20

தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட தமிழ்த்தினப் போட்டிகளில் வடக்கு - கிழக்கு மாகாண மாணவர்கள் அதிக வெற்றிகளைப் பெற்றுள்ளார்கள்.

பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட 48 போட்டிகளில் 24 முதலாம் இடங்களையும், 18 இரண்டாம் இடங்களையும் வடக்கு - கிழக்கு மாணவர்கள் பெற்றுள்ளார்கள்.

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில், நாட்டில் இதுவரை நிலவிவந்த யுத்தம் தணிந்து சுமுகநிலை ஓரளவிற்கு ஏற்பட்டிருப்பது வடக்கு-கிழக்கு மாணவர்களின் ஆற்றலை வெளிக்கொணர்வதற்கும் மேலும் வளப்படுத்துவதற்கும் வாய்ப்பாக அமைந்துள்ளது என்றார். (ஒ-6-12)

# முன்பள்ளி சிறாரின் உடல், உளவளர்ச்சியில் அதிக அக்கறை காட்டப்பட வேண்டும்!

## விளையாட்டு விழாவில் விரிவுரையாளர் உரை

இணுவில்,ஒக்.20

முன்பள்ளிச் சிறார்களின் உடல், உளவளர்ச்சியில் பெற்றோர்களும், ஆசிரியர்களும் அதிக அக்கறை செலுத்த வேண்டும்.

கோண்டாவில் வடக்கு அம்பிகை முன்பள்ளியின் விளையாட்டு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் செல்வி மலர் சின்னையா இவ்வாறு தெரிவித்தார்.

கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் ஆசிரியர் மு.விமலாம்பிகை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வை யாழ். மாவட்ட மாணவர் அமைப்பைச் சேர்ந்த எழிலன்பன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். இந்த விளையாட்டு விழாவில் தொடர்ந்து உரையாற்றிய விரிவுரையாளர் கூறியதாவது:-

உடல், உள, சமூக எழுச்சியை சிறுவர்களிடையே முதல் 5 வயதுக்குள் ஊட்டிவிடவேண்டும். ஏனெனில் சிறந்த அத்திவாரமிடலுக்கான பருவம் அப்பருவமேயாகும்.

முன்பள்ளியானது சிறுவர்களை துன்புறுத்தி கல்விகற்பிப்பதற்கான இடமல்ல. மாறாக பிள்ளையானது அரச பாடசாலையில் கல்வி கற்பதற்காக தன்னை தயார்ப்படுத்தும் ஒரு ஆரம்ப இடமாகும்.

இந்த ஆரம்பப் பள்ளியே சிறுவர்களின் முதல் களம். இங்கே பிள்ளைகள் அச்சமற்றவர்களாக காணப்பட வேண்டும். சகமாணவர்களோடு சேர்ந்து ஆடல், பாடல்களிலும், விளையாட்டுகளிலும், மனம்விரும்பி ஈடுபட்டு மகிழவேண்டும்.

இதேவேளையில் -

முன்பள்ளிச் சிறார்களுக்கு நல்ல கருத்துகளை ஊட்டி வளர்க்கவேண்டும். அப்போதுதான் நாளைய சமூகம் நல்லதொரு அத்திவாரத்தில் உயர எழுந்து பிளிர்ந்து நிற்கும்.

ஆகவே பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை வீடுகளில் சோம்பியிருக்கவிடாது முன்பள்ளிகளுக்கு அனுப்புவதில் அக்கறை செலுத்த வேண்டும் என்றார் அவர். (ஒ-49)

### ஆங்கில தினப் போட்டியில் உடுவில் மாணவிகள் சிறப்பு செயற்பாடு!

யாழ்ப்பாணம்,ஒக்.20

திருகோணமலையில் அண்மையில் நடைபெற்ற மாகாண மட்ட ஆங்கில தினப்போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி மாணவிகள் சிறப்பாகச் செயற்பட்டுள்ளனர்.

இதனால் இப்போட்டியில் அவர்கள் மூன்று முதலாம்இடங்களையும் நான்கு இரண்டாம்இடங்களையும் மூன்று மூன்றாம்இடங்களையும் சுவீகரித்துள்ளனர்.

அந்த விவரங்கள் வருமாறு:-

பேச்சு, எழுத்தாக்கம்

முதலாமிடம் - உ.சகானா

இரண்டாமிடம் - தே.டிலானி, த. சார்த்திகா

மூன்றாமிடம் - சோ.சாந்தி, போ. ஜேறாய்

நாடகம் - ஆரம்பப்பிரிவு -முதலாமிடம், நாடகம் - இடை நிலைப் பிரிவு, மூன்றாமிடம் - குழுப்பாடல் - ஆரம்பப்பிரிவு - முதலாமிடம், குழுப்பாடல் - இடைநிலைப்பிரிவு இரண்டாமிடம், உரையாடல் நாடகம் - சிரேஷ்டபிரிவு - இரண்டாமிடம். (ஒ-10)

### சீமெந்து விற்பனை அதிகரிப்பு

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதிலிருந்து இற்றைவரையான சுமார் ஒன்றரை வருடகாலத்துக்குள் சுமார் 20 லட்சம் சீமெந்துப் பக்கற்றுக்கள் குடாநாட்டுக்கு எடுத்து வரப்பட்டிருப்பதாக யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

இது கடந்த சுமார் 10 வருட காலத்தில் இங்கு கொண்டுவரப்பட்ட சீமெந்துப் பக்கற்றுக்களின் எண்ணிக்கையை விட அதிகமானது என்றும் அவர் கூறினார்.

எனவே புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் யாழ்ப்பாணக் குடாநாட்டில் கட்டுமானப் பணிகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதையே இது உணர்த்துகின்றது என்றும் அரச அதிபர் சுட்டிக்காட்டினார். (ஒ-4)

# கல்விச்சாலைக் காட்சிகள்



தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் உதவியுடன் நாவற்குழி தெற்கில் அமைக்கப்பட்ட மகாவிஷ்ணு முன்பள்ளிக்கான கட்டடத்தின் திறப்புவிழாவில் மாணவர் வழங்கிய கலைநிகழ்ச்சி. *(படம் : தேவா)*



ஊரெழு கலைவாணி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் இடம்பெற்றது. அதில் இடம்பெற்ற அணிவகுப்பை படத்தில் காணலாம். *(படம் : தெல்லிப்பழை செய்தியாளர்)*



மானிப்பாய் செள்.ஆன்ஸ் றோ.க.த.க. பாடசாலை வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் அதிபர் சங்.சகோதரி செபஸ்தியாம்பிள்ளை அழகேஸ்வரி தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். *(படம்: சண்டிலிப்பாய் செய்தியாளர்)*



உசன் இராமநாதன் மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் உதவியுடன் வித்தியாலய வளவில் புதிதாக கிணறு ஒன்று வெட்டப்பட்டது. இதற்கான பொங்கல் நிகழ்வில் கிணறு அமைக்க நிதி வழங்கிய திருமதி நா.கணபதிப்பிள்ளை மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். வித்தியாலய அதிபர் செ.சுப்பிரமணியமும் பழைய மாணவர் சங்கத் தலைவர் க.சுகுந்தனும் படத்தில் காணப்படுகின்றனர். *(படம் : தென்மராட்சி செய்தியாளர்)*

# பணியாளர்கள் தேவை

**01) பத்திரிகை மடித்தல்**
**02) பத்திரிகை விநியோகித்தல்**

இவ்விரு பணிகளுக்கும் வேலையாள்கள் தேவை.

பத்திரிகை விநியோகப் பணியை மேற்கொள்பவர்கள் சாரதி அனுமதிப்பத்திரத்துடன் சொந்தமாக மோட்டார் சைக்கிள் வைத்திருப்பது விரும்பத்தக்கது. ஏற்புடையவர்கள் தேவையான ஆவணங்களுடன் நேரில் வரவும்.

மனித வள முகாமையாளர்,
உதயன் மனித வள சேவை,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(25-11-18) (C/30904)

## பத்தாம் ஆண்டு நினைவலைகள்



திருமதி
**நிமலராஜா ஜெயராணி**


பாசம் மிகு உடன் பிறப்பே
ஆண்டுகள் பத்து ஆனாலும்
கணப் பொழுதும் மறந்ததில்லை
பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் ஒளி விளக்காய்
எமை ஒளிரச் செய்த
எம் குல விளக்கே ~ உன்னை
உடன் பிறப்புக்கள் என்றும் மறவாத
இந்நாளில் உன்னை நினைவு கூருகின்றோம்.

தகவல்:
தி.சுரேந்திரன் தம்பதிகள்,
ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம். (23852) (25-11-18)

பிரிவால் துயருறும்:
தாய், சகோதர சகோதரிகள்.

## 45 ஆம் நாள் நினைவு அஞ்சலி

தோற்றம் 25 - 06 - 1950



மறைவு 06 - 09 - 2003

அமரர்
**செல்லையா யோகேஸ்வரன்**
(அதிபர், யா/புத்தூர் மெ.மி.த.க. பாடசாலை)

*எம் கல்லூரிக்கு உரமாய் நின்று*
*எந்நாளும் கல்வியின் உயர்வுக்காய் உழைத்து*
*எம்மையெல்லாம் கண்ணீரில் மிதக்க விட்டு*
*எங்கு சென்றீர்களோ ஐயா?*

அன்னாரின் பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யா/புத்தூர் மெ.மி.த.க. பாடசாலை,
புத்தூர். (23808) (26-11-18)

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

## இலவச சிகிச்சை முகாம்

யாழ்ப்பாணம்,ஒக்.20

'கொம்ஸ்ரா' இலவச மருத்துவ சேவையின் ஏற்பாட்டில் கொரிய நாட்டு தேசிய மருத்துவ சேவைக்குழுவினரின் இலவச சிகிச்சை முகாம் அடுத்த மாதம் 4ஆம், 5ஆம், 6ஆம், 7ஆம் திகதிகளில் தினமும் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை கைதடி சித்த வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது. சிகிச்சை முகாமிற்கு வருபவர்கள் முன்கூட்டியே பதிவுகளை கைதடி போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது. (ஒ-7)

## இந்திய மீனவ படகோட்டிகளுக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம்,ஒக்.20

நெடுந்தீவுக் கடற்பரப்புக்குள் ஊடுருவி மீன்பிடித்துக்கொண்டிருந்த சமயம் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களின் 11 படகோட்டிகளையும் எதிர்வரும் 30ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தப் படகுகளில் இருந்த ஏனைய மீனவர்களை இந்தியக் கடற்படையிடம் கையளிக்கும்படி காரைநகர் கடற்படையினருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது. (ம-3-6)

## வீதிகள் மோசம்

மாதகல்,ஒக்.20

பண்டத்தரிப்பில் இருந்து மாதகலுக்குச் செல்லும் பிரதான வீதியில் பழைய கிராமக்கோடு வரையும் குண்டும் குழியுமாகக் காணப்படுவதால் வீதியால் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இப்பகுதியில் உள்ள விபுலானந்தர் வீதி, தபாற்கந்தோர் வீதி ஆகியனவும் சேதமடைந்து காணப்படுகின்றன. இதேபோன்று பல வீதிகள் சேதமடைந்து காணப்படுகின்றன.(ஒ-10-95)

## அடிக்கல் நடும் விழா

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

சாவகச்சேரி ஆஸ்பத்திரி வளவில் அமைக்கப்படவுள்ள இக்கட்டடத்திற்கான அடிக்கல் நடும் வைபவம் இன்று இடம்பெறவுள்ளது. (ஒ-117)

## வீதி விபத்துக்களில் நால்வர் காயம்!

சாவகச்சேரி,ஒக்.20

சாவகச்சேரிப் பகுதியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற வெவ்வேறு வீதி விபத்துக்களில் நான்கு பேர் காயமடைந்தனர்.

கல்வயலைச் சேர்ந்தவர்களான சின்னையா ஜெயக்குமார், சிகரன் மற்றும் வையாபுரி பொன்னம்பலம், விநாயகமூர்த்தி பரமானந்தம் ஆகியோரே காயமடைந்தவர்களாவர். (ஒ-10-31-117)

## வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணம் **J.K.D.S.** கிளப் மாஸ்ரர் **S.K.**கேதீஸ்வரனிடம (5ஆம் கறுப்புப்பட்டி) பயிற்சி பெற்ற நவாலியைச் சேர்ந்த மாணவி

**றஞ்சன் சுமனா**


(முதலாம் கறுப்புப்பட்டி) அவர்கள் தமிழீழ விளையாட்டுத்துறையில் மேஜர் ஈழப்பிரியா நினைவான கராத்தே சுற்றுப்போட்டி - 2003 இல் கலந்துகொள்வதையிட்டு வாழ்த்துகின்றோம்.

யாழ்ப்பாணம். (23856)

(25-11-18)

அங்கத்தவர்கள்:
J.K.D.S.கிளப்

## பெருமையுடன் வாழ்த்துகின்றோம்



அல்வாய் சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் கோயில் பரிபாலன சபையின் தலைவராக விளங்கி இப்பதவிக் காலத்திலேயே உலக வங்கியின் அனுசரணையுடன், கல்வியமைச்சின் புலமைப் பரிசில் பெற்றுச்சென்று, அவுஸ்திரேலிய 'வூலோங்கொங்' பல்கலைக்கழகத்தின் கல்வியியற் கலாநிதி (Doctor of Education) பட்டத்தைப் பெற்றுக்கொண்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியற்துறை விரிவுரையாளர்

**கலாநிதி தம்பிஐயா கலாமணி**

[B.Sc.Hons (Physics) Peradeniya, Dip.in. Ed.(Jaffna), Ed.D.Wollongong (Australia)]

அவர்களை நீடூழி வாழ்ந்து, வளர்ந்து, மேன்மேலும் பெருமை சேர வாழ்த்தி மகிழ்கின்றோம்.

- அல்வாய் மனோகரா மக்கள் -

(25-11-18) (23851)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கிட்ணர் அருபதி

இலந்தைக்காடு, வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிட்ணர் அருபதி நேற்று (19.10.2003) ஞாயிற்றுக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிட்ணர் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற அருள்மைத்துரை மற்றும் தவராசா (கனடா), ஜெயம் (கனடா), குலம், சிவதாஸ் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சறோஜினிதேவி, செல்லம் (கனடா), காலஞ்சென்ற றோஸ்மலர் மற்றும் விஜிதா (கனடா), சாந்தா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் கனடாவைச் சேர்ந்த ஜெயராஜ், கொஸ்லி, நியூட்டன், டலுசன், ஜெனிஸ், ஜெயகாந்த், பிரபாகரன் (லண்டன்), ஜென்சி, நிக்சன், குகன், பிரயாணா, ஜகீதரன், பிரிந்தா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.10.2003) திங்கட்கிழமை பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் எள்ளங்குளம் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இலந்தைக்காடு,
வல்வெட்டித்துறை. (23858) (26-11-18)

தகவல்:
கி. தவராசா (மகன்)

## செல்லப்பா இராமலிங்கம்

(ஓய்வுபெற்ற புத்தக இணைப்பாளர், சுகாதாரத் திணைக்களம்)

மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா இராமலிங்கம் அவர்கள் 18.10.2003 சனிக்கிழமை அன்று பிற்பகல் காலமானார்.

அன்னார் செல்லப்பா - தங்கமுத்துவின் மூத்த மகனும் தங்கம்மாவின் அன்புக் கணவரும் சுப்பிரமணியம் - தங்கமுத்துவின் மருமகனும் இராசையா, கந்தையா (ஓய்வுபெற்ற ஆசிரியர்), பொன்னையா (துறைக்காய்), நாகம்மா, செல்வத்துரை (ஓய்வுபெற்ற வைத்தியர்) ஆகியோரின் சகோதரரும் இராஜேஸ்வரி, சிவராசா (சிவராசா பேக்கரி, பெருங்குளம் சந்தி, முன்னாள் தென்மராட்சி பேக்கரி சங்க தலைவர்), அற்புதராணி (கொழும்பு), இந்திராணி, ஜெயராணி, பவளராணி (முன்னாள் ஆசிரியை, மட்டுவில் கமலாசனி வித்.),யோகராணி (ஆசிரியை, மட்டுவில் கமலாசனி வித்.), கலைவாணி (மட்டுவில் சந்திரமௌலீச வித்.) ஆகியோரின் தந்தையும் காலஞ்சென்ற செல்வரட்ணம் மற்றும் புஸ்பராணி, ரவீந்திரா (கொழும்பு), கிருஷ்ணமூர்த்தி, விக்கினேஸ்வரன், சற்குணலிங்கம் (இந்தாவில்), பாலச்சந்திரன் ஆகியோரின் மாமனாரும் இராஜராணி (முல்லை, அளம்பில் R.C.T.M.S), நந்தனன், செல்வன், திருமகள் (யாழ். பல்கலைக்கழகம், 3 ஆம் வருடம் கலைப்பிரிவு), பிரகலாதன்-பிலோமினா (லண்டன்), மோகன்ராஜ்-பபா (லண்டன்), லோகசந்திரா, ஜெயகரன், கோகுலன் (சாவ.இந்துக் கல்லூரி மாணவர்கள்), வருணன் (டிறிபேக் கல்லூரி), கார்த்தியன், ரகுவரன், ஜனார்த்தனி, அகலினி, பவீந்தினி, சியாமினி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.10.2003) திங்கட்கிழமை மட்டுவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் பிற்பகல் 3 மணிக்கு தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வேம்பிராய் வாசிகசாலை ஒழுங்கை,*
*மட்டுவில் வடக்கு,*
*சாவகச்சேரி.* (23849) (25-11-18)

தகவல்:
இ.சிவராசா
(மகன்)




**தித்திக்கும் தீபாவளியை முன்னிட்டு....!**
உங்களுக்குத் தேவையான அனைத்து ஜவுளி, ஆடை, சாறி வகைகளை மலிவு விலையில் பெற்றுக்கொள்ள

**மிலேனியம் பெஷன் இம்போரியம்**

10, மின்சார நிலைய வீதி,
பெரியகடை, யாழ்ப்பாணம்.(மயான் கடைக்கு முன்)

3000/= ரூபாவுக்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு சிறுவர்களுக்கான ஸ்கூல் பாக் ஒன்று இலவசமாக வழங்கப்படும்.

077 311486 (C/30690) (25-11-18)







**உலகப் புகழ் பெற்ற L.G குளிர்சாதனப் பெட்டிகள் Abans நிறுவனத்தின் உத்தரவாதத்துடன் இலவச விநியோக சேவையில் பெற்றிட**

LG
Digitally yours

**JAFFNA ELECTRICALS**
Authorised Dealer For
**Abans**
141, POWER HOUSE ROAD, JAFFNA TEL: 021-222-5766
(C/30881)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

கிருஷ்ணன் தர்மராஜா என்பவரின் தேசிய அ.அட்டை, விசேட அ.அட்டை, சிறுதொகைப் பணம் அடங்கிய பேர்ஸ் 18.10.2003 அன்று யாழ். பஸ்நிலையத்துக்கும் போதனா வைத்தியசாலைக்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தம்பு கிருஷ்ணன், துரை வீதி, தாவடி வடக்கு, கொக்குவில் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.(23844)

கொழும்புத்துறையைச் சேர்ந்த ஞா.டெலாஸ் (குஞ்சித்தம்பி) என்பவரது வாகன சாரதி அனுமதிப்பத்திரம், தேசிய அ.அட்டை மற்றும் சைக்கிள் திறப்பு என்பன பருத்தித் துறையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் யாழ். ப.நோ.கூ.சங்கம், ஆரியகுளம் கிளையில் ஒப்படைக்கவும். (23828)

### மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1968 ஆம் ஆண்டு பிறந்த, திருவோணம் நட்சத்திர ஆசிரியை மணமகளுக்கு கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகன் தேவை. உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது. வீடு, நகைகளுடன் நியாயமான சீதனம் தரப்படும். தொடர்பு: விள. இல.2077, மே/பா உதயன். (23822)

### வகுப்புகள்

கணிதம், ஆங்கிலம் வகுப்புகள் ஆண்டு 5-11வரை. 16 வருட சேவையுள்ள பட்டதாரி ஆசிரியரினால் நடத்தப்படுகின்றன. தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கும் துரித மீட்டல் (பொறியியல் பகுதி) தொடர்பு: அ.ஞானசம்பந்தன், 67, கல்லூரி வீதி, நீராவியடி (கடித மூலம்). (23842)

### நோய்த்தடுப்பூசி

சண்டிலிப்பாய்,ஓக்.20

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மூன்று வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு மூளைக் காய்ச்சல் நோய்த்தடுப்பூசி மருந்து அடுத்த வாரத்தில் ஏற்றப்படவுள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஒ-10-135)

### புறொயிலர் விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். ஒரு கிலோ 120/=. தொடர்பு: விநாயகர் வீதி, கல்வியங்காடு. (23818)

தரமான Broiler இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. ஒரு கிலோ 130/-, சுத்தம் செய்யப்பட்டது ஒரு கிலோ 220/-. தினமும் சுத்தம் செய்து வேண்டிய அளவுகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: திரு. சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு. (23777)

### விற்பனைக்கு

லிஸ்ரர் ஜெனறேற்றர் - 22KV-3 Phase மிகநல்ல நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: 118, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (23832)

### தேவை

பூங்கன்று விற்பனை செய்வதற்கும், பூங்கா பராமரிப்பதற்கும் ஆண், பெண் இருபாலாரும் உடனடியாகத் தேவை. சம்பள விவரம் நேரில் பேசித் தீர்க்கலாம். இங்கு உயர்ரக பூஞ்செடி, குரோட்டன் வகைகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 152/2, கோயில் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 222 6563 (ICRC இற்கு அருகில்) (23773)

### கணனி வகுப்புகள்

Photo Shop, MS Office, Hardware With Net Working வகுப்புகள் நடைபெறுகின்றன. கம்பியூட்டர் றிப்பெயர் செய்தும் கொடுக்கப்படும். தொடர்புகளுக்கும் உடனடித் திருத்த வேலைகளுக்குமுரிய தொ. இல.: 0777 - 666795.(23809)

### எங்கள் நாடு

வானொலியில் சனிக்கிழமை "வாழ்க்கைகள் பலவிதம்" நாடகம் கேட்டீர்களா? அதை எழுதிய கலாபூசணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூல் "எங்கள் நாடு" பரிசு பெற்ற இலங்கை வானொலி நாடகங்களின் தொகுப்பு ரூபா 75/=. (23845)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



*வில்லிசைப் புலவர், முத்தமிழ் மாமணி*
*கலாவிநோதன், கலாபூஷணம்*

**திரு.க. நா. கணபதிப்பிள்ளை**
**(J.P.) (சின்னமணி)**

அவர்கள் நேற்று (19.10.2003) ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் நடைபெற்ற இலக்கியப் பெருவிழாவில் "ஆளுநர் விருது" பெற்றதையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வளர்க இவரின் கலைத்தொண்டு!
வாழ்க பல்லாண்டு!

அச்சுவேலி.
(23830) (26-24-13-16)

**ஸ்ரீகண்ணகி அச்சக ஊழியர்கள்:**
**தவராஜா, மனோ, ரதி, சுஜாதா.**


mini INFOTEL LANKA 2003

## யாழ்ப்பாணம்

2003 ஐப்பசித்திங்கள் 24 முதல் 26 வரை
காலை 10 மணி முதல் மாலை 9 மணி வரை
யாழ் மத்திய கல்லூரியில்

மறக்க முடியாதோர் நிகழ்வு...
தவறவிட முடியாதோர் சந்தர்ப்பம...
குறு தகவல் தொலைக்கண்காட்சி, புதிய தகவல் நுட்ப உலகம் பற்றியதோர் கண்நோக்கினை அளிக்கும்.

தகவல் தொழில் நுட்ப உதவியுடன் என்ன செய்யலாம் என்பதனையும் சகல துறைகளிலும் அது தருகின்ற வரையறையற்ற சந்தர்ப்பங்களையும் கண்காட்சியில் கண்டு கொள்ளலாம்.

அனுமதி
மாணவர் - ரூ 10/-
ஏனையோர் - ரூ 20/-

தவறவிடாதீர்கள்!

Official Airline | Official Bank | Official Sponsors

NSB | PC | intel.



# சனிக்கிழமை அதிர்ஷ்டம்







## உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 3056287 இருந்து
3074914 வரை
சீட்டிழுப்பு இல. 1445
திகதி 18.10.2003

## வெற்றி எண்கள்

**04 10 13 25 40**

போனஸ் எண் **22**

## ஜக்பொட் பரிசு

**ரூபா.1,500,000/-** வெல்லப்பட்டுள்ளது

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 1,500,000/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 02 | 100,000/- | 200,000/- |
| 4 | 104 | 10,000/- | 1,040,000/- |
| 3 | 5,827 | 500/- | 2,913,500/- |
| 2 | 97,133 | 20/- | 1,942,660/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 04ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 119,288 | 10/- | 1,192,880/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.7,289,040/-

இந்த புதன்கிழமைக்கான ஜக்பொட்
**ரூபா.2,422,500/-**

தொடர் இல. 2098237க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுகள் 2003 ஒக்டோபர் 22ம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

3070747-5-92
3071305-7-88
3060011-2-13
3057598-0-31
3065370-9-82

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

PHOENIX O&M




# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 518 |
| திகதி | 17.10.2003 |

டிக்கட்டின் நிறம் - சிவப்பு
செல்லுபடியாகும் தொடர் இல.
5255403-5270976

**வெற்றி இலக்கங்கள்** **19 27 42 45**

**லக்கினம்** மிதுனம்




**ஜக்பொட் பரிசு**
**ரூபா. 1,811,000/-**
**வெல்லப்படவில்லை**

இந்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **2,572,900/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 341,308 | 10 | 3,413,080 |
| 2 இலக்கங்கள் | 31,290 | 20 | 625,800 |
| 1 இல + லக்கினம் | 31,033 | 30 | 930,990 |
| 2 இல + லக்கினம் | 2,880 | 100 | 288,000 |
| 3 இலக்கங்கள் | 834 | 500 | 417,000 |
| 3 இல + லக்கினம் | 69 | 5,000 | 345,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | - | 1,811,000 | - |
| மொத்தம் | 407,418 | - | 6,419,870 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 6,419,870/-

தொடர் இல. 4277451க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுகள் 2003 ஒக்டோபர் 21ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

5268937-8-28
5269749-1-53
5262418-4-78
5261443-4-12
5268265-6-24

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

PHOENIX O&M

# பாதுகாப்பின் முழுக்கட்டுப்பாடும் இடைக்கால நிர்வாக சபையிடம்

## தமிழ்ச்செல்வனிடம் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஒக்.20

வடக்கு - கிழக்கு பிரதேசப் பாதுகாப்பில் இடைக்கால நிர்வாக சபை முழுக்கட்டுப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும். இராணுவம் முகாம்களில் முடங்கவேண்டும்.

- இவ்வாறு யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கோரியுள்ளது.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இப்படி அச்சங்கம் கோரியுள்ளது.

அச்சங்கம் இக்கடிதத்தின் பிரதி ஒன்றை, யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த கனேடிய வெளிவிவகார அமைச்சர் பில் கிரஹமிடமும் நேரடியாக சங்கம் கையளித்தது.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

★ உள்ளக சுயநிர்ணய உரிமையுடனான சமஷ்டி ஆட்சிமுறை ஊடாக தீர்வு காண்பதற்கு சிறீலங்கா அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் இப்பொழுது ஒப்புக்கொண்டுள்ளனர்.

★ இடைக்கால நிர்வாகத்தின் உட்கட்டமைப்பு, மேற்குறிப்பிடப்பட்டுள்ள இலக்கை எய்துவதற்கான செயற்பாட்டை ஏற்படுத்தும் என நாம் உணருகிறோம்.

★ வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள உட்கட்டமைப்பு வசதிகள் சுதந்திரம் பெற்ற காலம்தொட்டு ஆட்சிசெய்த அரசுகள் கைக்கொண்ட பாரபட்சமான கொள்கைகளினால் துரதிஷ்டவசமாக வளங்குன்றச் செய்யப்பட்டது. தேசிய மட்டத்தில் அபிவிருத்தித் திட்டங்களுக்கு வடக்கு - கிழக்கு மக்கள் பங்களிப்புச் செய்வதைப் பறித்தது மட்டுமல்லாது, இந்த மாகாணத்தின் ஆற்றலைக் கட்டி எழுப்புவதையும் குறைவடையச் செய்துள்ளது.

★ இரு தசாப்தகால யுத்தமும் எமது ஆயுதப் படையினர் மேற்கொண்ட ஈவிரக்கமற்ற குண்டுத் தாக்குதல்களினாலும் எமது எஞ்சியிருந்த வசதிகளும் மேலும் ஒடுக்கப்பட்டன.

★ எனவே புனர்நிர்மாணமும் புனர்வாழ்வளிப்பதுமே காலத்தின் தேவையாக இருக்கிறது. வடக்கு - கிழக்கு மற்றும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் இடையேயான ஏற்றத் தாழ்வையாவது நிவிர்த்தி செய்வதற்கு புதிய செயற்திட்டங்களின் முன்முயற்சிக்கு முதலிற் கவனஞ் செலுத்த வேண்டிய தேவை இருக்கிறது.

★ மேலே கூறப்பட்ட திட்டங்களைப் பொறுப்பேற்று மேற்கொள்ளக் கூடிய ஆற்றலுள்ள அரசியற் கட்டமைப்பொன்றினால் மட்டுமே இது சாத்தியமாகும்.

★ இடைக்காலசபையானது இப்பிரதேசத்திலுள்ள தமிழர் அல்லாதவர்களுக்குப் போதிய பாதுகாப்பை அளிக்கும் அதேவேளை மேற்கூறப்பட்ட திட்டங்களை மேற்கொள்வதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆணையிடும் தகுதி அளிக்கப்படவேண்டும். வேறு வார்த்தைகளிற் கூறின், இந்திய - சிறீலங்கா ஒப்பந்தத்தில் உள்ளது போல விடுதலைக்கான போராட்டத்தில் அவர்களுடைய பங்கினைக் கருத்திற் கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் பெரும்பான்மையைக் கொண்டிருக்க வேண்டும்.

★ உள்நாட்டுப் பாதுகாப்பின் மீது இச்சபை முழுக்கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கவேண்டும். இராணுவம் முகாம்களில் முடங்கவேண்டும். மீள் குடியமர்த்தல் மற்றும் புனர்நிர்மாணம் முற்றிலும் இச்சபையிடம் ஒப்படைக்கப்படவேண்டும். விவசாயம், கூட்டுறவு, காணியும் காணி அபிவிருத்தியும், குடியேற்றம், கல்வி, சுகாதாரம், கைத்தொழில், மீன்பிடித்துறை, சமூகசேவைகள், மின்சாரம், நீர்வழங்கும் திட்டங்கள், வீதிகள் போன்றவையும் இவ்வாறே ஒப்படைக்கப்படவேண்டும்.

★ இந்திய - சிறீலங்கா ஒப்பந்தம் ஓரளவு சுயநிர்ணய உரிமையை ஏற்பாடு செய்திருந்த போதும், ஒதுக்கி வைக்கப்பட்ட மற்றும் உடன் நிகழும் விடயங்களின் பட்டியல் போன்றவற்றின் உள்ளடக்கமும் வடக்கு - கிழக்கு சபை தனது செயற்பாடுகளைப் பயன்விளைவாக மேற்கொள்வதைத் தடுக்கும் அதிகாரத்தை மத்திய அரசிடம் அளித்ததின் மூலம், தமது விவகாரங்களை கையாள்வதற்கு சுயநிர்ணய உரிமையினை ஓரளவிற்காவது பிராந்திய மக்கள் அனுபவிக்கும் வாய்ப்பைப் பறித்தது என்பதை கூறத்தேவையில்லை.

★ இந்த அனுபவங்களின் மனத்தெளிவு மற்றும் தமிழர்களுடன் அதிகாரத்தைப் பகிர்வதற்கு தொடர்ச்சியாக ஆட்சி செய்த கொழும்பு அரசுகளின் விட்டுக்கொடுக்குந் தன்மையற்ற போக்கினாலும், கொழும்பிலுள்ள அரசாங்கத்தினாலும் வீண் தலையீடின்றிச் செயற்படக்கூடிய இடைக்கால நிர்வாகத் திட்டமொன்றைச் சமர்ப்பிக்குமாறு நாம் வலியுறுத்துகிறோம். எடுத்துக்காட்டாக உள்நாட்டுப் பாதுகாப்பு, காணி ஒதுக்கீடு, குடியேற்றம், உயர் கல்வி உட்பட கல்வி போன்ற விடயங்கள் முற்றிலும் இடைக்கால நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இணக்கம் காணப்படும் வெளிநாட்டு உதவியும் முதலீடுகளும் இடைக்கால நிர்வாகத்தின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்படவேண்டும். சுருக்கமாகக் குறிப்பிடுகையில் பிராந்தியத்தின் பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகள் இடைக்கால நிர்வாகத்தினால் திட்டமிடப்பட்டு நிறைவேற்றப்படவேண்டும் என்றுள்ளது.

(ஒ-3)

# அரச அலுவலர்களின் மெத்தனத்தால் யுவதியின் வெளிநாட்டுப் பயணம் தடை

யாழ்ப்பாணம்,ஒக்.20

பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் பெயர் மாற்றம் செய்த யுவதி திருமணத்திற்காக வெளிநாடு செல்லவிருந்த பயணம் அரச அலுவலர்களின் மெத்தனப் போக்கால் தடைப்பட்டதாக கூறப்படுகின்றது.

தெல்லிப்பழையைச் சேர்ந்த இந்த யுவதியின் குடும்பம் 1990ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து கோப்பாயில் தங்கியுள்ளது. இந்த யுவதியின் பிறப்புச்சான்றிதழ் பதிவு செய்யப்பட்ட சமயத்தில் அவரது பெயர் இருக்கவேண்டிய இடத்தில் அவரது தந்தையாரின் பெயர் தவறுதலாக பதிவு செய்யப்பட்டுவிட்டது.

காலம் தாழ்த்தியே இதனை யுவதியின் பெற்றோர் அறிந்தனர். இதனையடுத்து சம்பந்தப்பட்ட யுவதி தனது எதிர்கால நலன் கருதி 1999இல் உரிய ஆவணங்களைக் காட்டி யாழ்.மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் தனது பெயரை உரிய இடத்தில் பதிவுசெய்து கொண்டார். அத்தோடு, பெயர் சரியாக பதியப்பட்ட சான்றிதழ் ஒன்றையும் அங்கு அவர் பெற்றுக்கொண்டார். கொழும்பிலுள்ள பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பிரதியிலும் இப்பெயர் திருத்தம் பதிவுசெய்யப்படும் என யாழ். மேலதிக மாவட்ட பதிவாளர் அலுவலகத்தால் இவருக்கு அப்போது கூறப்பட்டது.

இதன் பின்னர் நான்கு வருடங்கள் கழிந்த நிலையில் தனது திருமணத்திற்காக வெளிநாடு செல்லும் நோக்கோடு இந்த யுவதி கொழும்பு சென்றார். அங்கு கடவுச்சீட்டுப் பெறுவதற்கான விண்ணப்பத்தை குடிவரவு குடியகல்வு திணைக்கள அலுவலகத்தில் யாழ்ப்பாணத்தில் பெற்ற பிறப்புச் சான்றிதழுடன் இணைத்துக் கொடுத்தார். அப்பெயர் மாற்றத்தில் சந்தேகம்கொண்ட அதிகாரிகள் கொழும்புப் பதிவாளர் அலுவலகத்தில் பிறப்புச்சான்றிதழ் பிரதியை பெற்றுவருமாறு பணித்தனர்.

அந்த யுவதியும் உடனடியாக கொழும்பில் உள்ள பதிவாளர் அலுவலகத்தில் பிறப்புச்சான்றிதழுக்கு விண்ணப்பித்து பெற்றுக்கொண்டார். ஆனால், அதனைப் பார்த்த யுவதி அதிர்ச்சியடைந்தார்.

ஏனெனில் நான்கு வருடங்கள் கழிந்தும் கொழும்புப் பதிவாளர் அலுவலகத்தில் உள்ள பிரதியில் அவரது பெயர் மாற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை.

இதனைத் தொடர்ந்து அந்த யுவதி யாழ்ப்பாணப் பதிவாளர் அலுவலகத்தில் விண்ணப்பித்து பெற்ற பிறப்பு சான்றிதழ் அங்குள்ள அதிகாரிகளுக்கு காட்டினார். ஆனால், அவர்களோ தமக்கு அப்படியான பதிவு எதுவும் இதுவரை கிடைக்கவில்லை என்பதோடு அப்படிப் பெயர் மாற்றம் செய்யவேண்டுமெனில் உடனடியாக யாழ்ப்பாணம் சென்று அங்கு அனுமதிக்கடிதத்தை பெற்றுவருமாறும் கூறினார்கள்.

அந்த யுவதியும் விரைவில் வெளிநாடு செல்லவேண்டும் என்ற நோக்கோடு உடனடியாக யாழ். அலுவலகத்திற்கு வந்து விடயத்தைச் சொன்னார். ஆனால் இங்கோ தாம் உரிய பதிவுகளை 1999ஆம் ஆண்டிலேயே அனுப்பிவிட்டதாகவும் கடிதம் தர முடியாது எனவும் கூறிவிட்டதாக அறியமுடிகிறது.

(ஒ-75)




காலஞ்சென்ற பனம் தொழில் வல்லுநர்களின் குடும்பங்களுக்கு உதவும் சமூக மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வலிகாமம் பனை, தென்னை வள சங்கங்களின் கொத்தணித் தலைவர் க.மெய்யழகன் இறந்த பனம் தொழில் வல்லுநர் ஒருவரின் குடும்பத்துக்கு இழப்பீட்டுத் தொகையை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

(படம்: மாதகல் செய்தியாளர்)

# யாழ். நவீன சந்தையில் வடிகால் மூடிகள் திருட்டு

யாழ்ப்பாணம்,ஒக்.20

யாழ்ப்பாணம் நவீன சந்தையின் உட்பகுதியில் கழிவுநீர் வடிகால்களின் மேலாகப் போடப்பட்டிருந்த இரண்டு சிமெந்து மூடிகள் இரவு வேளை திருடப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு இச்சம்பவம் இடம்பெற்றது.

சுமார் 4 அடிநீளம், 4அடி அகலம் கொண்ட இந்த சிமெந்து மூடிகள் இரவு நவீன சந்தையின் வாயில்கள் பூட்டப்பட்டு காவலாளிகள் கடமையில் இருந்த வேளையில் திருடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

காவலாளிகள் இருந்தும் வாயில் பூட்டப்பட்டிருந்தும் திருட்டுப்போகும் இப்பாதுகாப்பற்ற நிலை தொடர்பாக வர்த்தகர்கள் யாழ். மாநகரசபையில் முறைப்பாடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வடிகால் மூடிகள் இல்லாததால் பொதுமக்கள் வடிகால்களைக் கடந்து கடைகளுக்கு செல்வதில் பெரும் சிரமங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது.

(ஒ-15)

# அதிக வேகத்துக்கு அபராதம்

யாழ்.நகரப் பகுதியில் அதிக வேகத்தில் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளுக்கு தண்டம் விதிக்கும் நடவடிக்கையை பொலீஸார் மேற்கொண்டுள்ளனர்.

நேற்றும், நேற்றுமுன்தினமும் மோட்டார் சைக்கிளில் சென்றோரில் பலர் தண்டப்பணம் செலுத்த நேரிட்டதை அவதானிக்க முடிந்தது.

வேகக்கட்டுப்பாட்டை மீறிய குற்றத்திற்காக 200 ரூபா தண்டப் பணமாக அறவிடப்படுகிறது. இத்தண்டப் பணத்தை யாழ்.பிரதம தபாற்கந்தோரில் செலுத்தும்போது அங்கு 20 ரூபா தரகுப்பணமாக அறவிடப்படுகிறது.

அண்மைக்காலமாக குடாநாட்டுப் பகுதியில் அடிக்கடி இடம்பெற்றுவரும் விபத்துக்களைத் தடுக்குமுகமாகவே பொலீஸாரால் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-15)

# வாள்களுடன் நடமாடிய குழு பொதுமக்களிடம் சிக்கியது

## சுன்னாகத்தில் சம்பவம்

வலி.வடக்கு,ஒக்.20

வாள்களுடன் நடமாடிய குழு ஒன்று பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் இரவு சுன்னாகம் மலப்பைப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

நேற்றுமுன்தினம் இரவுவேளை சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய நால்வரை, அப்பகுதி மக்கள் வழிமறித்து விசாரிக்க முற்பட்டனர்.

அப்போது அவர்களில் இருவர் தப்பியோடிவிட இருவர் மட்டுமே பிடிபட்டனர். ஆனால், தப்பியோடிய இருவரும், பிடிபட்ட தமது சகாக்களின் நிலை பற்றி அறிவதற்காக மறுநாள் காலை இலக்கமற்ற புத்தம்புதிய மோட்டார் சைக்கிளில் வந்தபோது, அவர்களும் பொதுமக்களிடம் சிக்கினர்.

பிடிபட்டவர்களில் ஒருவர் ஏற்கனவே தேர் சிற்பங்கள் திருடப்பட்ட சம்பவத்தில் தொடர்புடையவர் என்று கூறப்படுகிறது.

இந்த நால்வரையும் பொதுமக்கள் சுன்னாகம் பொலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

அவர்களைப் பொலீஸார் மல்லாகம் மாவட்ட நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து அவர்களை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.(ஒ-86)

# செய்திக் கொத்து

### இலவச கண்ணாடி விநியோகம்

சாவகச்சேரி,ஒக்.20

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினால் கண்பார்வை குறைந்தவர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் வைத்து இவை கடந்த 10ஆம் திகதி வழங்கப்பட்டன. அத்துடன் சரசாலை பகுதியில் உள்ள முன்பள்ளி மாணவர்களுக்கு இலைக்கஞ்சி வழங்குவதற்கான பாத்திரங்களும் வழங்கப்பட்டன.

(ஒ-10-31)

### சமிக்ஞை குறியீடு அமைப்பு

வலி.தெற்கு,ஒக்.20

காங்கேசன்துறை வீதியில் அம்பலவாணர் வீதியும் சபாபதிப்பிள்ளை வீதியும் இணையும் நாற் சந்தியில் விழிப்புலனிழந்தோரின் நலன்கருதி வதியைக் கடப்பதற்கான சமிக்ஞைக் கோடுகளும் சமிக்ஞை அறிவிப்புப் பலகையும் அமைக்கப்பட்டுள்ளன.

சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினமான கடந்த 15ஆம் திகதி உடுவில் வாழ்வகத்தினால் இவை அமைக்கப்பட்டன.

(ஒ-10-152)

### காலாவதியான பொருள்கள் அழிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.20

யாழ். வண்ணார்பண்ணைப் பகுதியில உள்ள கடையொன்றில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த காலாவதியான பிஸ்கட் பைக்கற்றுக்கள் அப்பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

(ஒ-10-12)

### கூ.சங்கங்களுக்கு அன்பளிப்பு

கொழும்புத்துறை,ஒக்.20

ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தினால் குடாநாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு கணனிகள், போட்டோப் பிரதி இயந்திரங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் என்பன அண்மையில் வழங்கப்பட்டுள்ளதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(ஒ-10-30)

### மரக்கறி நாற்று விநியோகம்

கொழும்புத்துறை,ஒக்.20

கொழும்புத்துறைப் பகுதியில் வீட்டுத்தோட்டச் செய்கையில் ஈடுபட்டு வருகின்ற குடும்பங்களுக்கு சமூகநல சேவைகள் திணைக்களத்தினால் மரக்கறி நாற்றுகள் அண்மையில் வழங்கப்பட்டன.

(ஒ-10-30)

### விவசாய வீதிகள்

வலிகாமம்,ஒக்.20

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள புன்னாலைக்கட்டுவன் வடக்கு, குப்பிளான் தெற்கு மற்றும் உடுவில் மத்தி ஆகிய இடங்களில் சமுர்த்தித் திட்டத்தின் கீழ் விவசாய வீதிகள் அமைக்கப்படவுள்ளன.

மேலும் சங்குவேலிக் கிராமத்தில் விவசாய பாலமும், உடுவில் மத்தியில் பொதுக்கிணறு ஒன்றும் இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்படவுள்ளன.

(ஒ-10-152)

### பயிற்சி மருத்துவர் நியமனம்

யாழ்ப்பாணம்,ஒக்.20

யாழ். போதனா வைத்தியசாலைக்கு பயிற்சி டாக்டர்கள் 25 பேர் புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் கற்கையை முடித்து வெளியேறியவர்களில் 25பேரே சுய விருப்பின் அடிப்படையில் இங்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

(ஒ-10-139)

### கடைக்குள் நுழைந்த 'லாண்ட் மாஸ்ரர்'!

வீதியால் சென்றுகொண்டிருந்த 'லாண்ட் மாஸ்ரர்' கட்டுப்பாட்டை இழந்ததால் கடையொன்றின் கதவுகளை மோதிச் சேதமாக்கியது.

மட்டுவில், கல்வயல் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அ.ஆனந்தராசா என்பவருடைய கடைக்கதவுகளே சேதமுற்றன.

(ஒ-10-31)

### கசிப்பு வேட்டை

உரும்பிராய் மேற்கு, அன்னங்கைப் பகுதியில் பொலீஸார் மேற்கொண்ட கசிப்பு வேட்டையின் போது சிலர் கைதுசெய்யப்பட்டதுடன் கசிப்புத் தயாரிக்கும் உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன.

கடந்த செவ்வாய்க்கிழமை இந்தக் கசிப்பு வேட்டை இடம்பெற்ற போது சிலர் வீடுகளில் இருந்து தப்பியோடியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.(ஒ-10-46)

# அந்தியேட்டி அழைப்பிதழும் நன்றி நவிலலும்

மண்ணின் மடியில் 26 - 11 - 1953



இறைவன் அடியில் 21 - 09 - 2003

திருமதி

## பத்மாதேவி சிவசுப்பிரமணியம்

*எம்மைப் பெற்றவளே – நீ*
*எங்கே தூங்குகின்றாய்?*
*முகம் தெரியாத இருட்டறையிலா?*
*முகவரி தெரியாத மந்திரக் கோலிலா?*
*திசை தெரியாது பயணப்பட்டவளே – உன்*
*முகத்தை நாம் எங்கே தேடுவது?*
*இரவுகளும் பகல்களும் – எமக்கு*
*கண்ணீராய்ப் போய்விடவே*
*நிம்மதி இழந்து தவிக்கின்றோம்.*

எமது அன்பு அன்னையார் சிவபதமடைந்த செய்தி கேட்டு நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தவர்களிற்கும் தொலைபேசி, கந்தமூலம் ஆறுதல் கூறியவர்களிற்கும் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றியவர்களுக்கும் மற்றும் பல வகையிலும் உதவிகள் புரிந்தவர்களிற்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாளை (21. 10. 2003) செவ்வாய்க்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மார்ட்டின் ஜெயராஜா
*புதுவளவு,*
*சுன்னாகம்.* (23859) (29-12-17)

- குடும்பத்தினர்.

PC House (p) Ltd, Jaffna.


விலை குறைப்பு — தீபாவளி மலிவு விற்பனை — கைநிறைய உள்ளவரை

சகலவித பட்டாஸ் வகைகளும் அதிரடி விலைக்குறைப்பில் இன்று முதல்

தீபாவளித் திருநாளை பட்டாசுடன் கொண்டாட மறந்துவிடாதீர்கள்

ராஜா குறோசறி & பென்சி கவுஸ்

153, மின்சார நிலைய வீதி,யாழ்ப்பாணம்

(வியாபாரிகளுக்கு மேலும் விசேட கழிவு உண்டு)

(23858) (29-12-17)


# மரண அறிவித்தல்

## திருமதி மனுவேற்பிள்ளை மதலேனம்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மாசீன்கூடலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனுவேற்பிள்ளை மதலேனம் அவர்கள் ஞாயிற்றுக்கிழமை அச்சுவேலியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மனுவேற்பிள்ளையின் அருமை மனைவியும் காலஞ்சென்றவர்களான பிலிப்புப்பிள்ளை - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் பிரகாசராணி (ராணி), ஆன்கிறேஸ், காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை, மரியநாயகி, காலஞ்சென்ற இராஜநாயகம் ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற யோசெப், மரியநாயகம், கிறிஸ்ரோஸ்றோம் (தாசன்) பேரியசிந்தா ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.10.2003) திங்கட்கிழமை மாலை 3.30 மணியளவில் அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, இரங்கற் திருப்பலியின் பின் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சங்கானை வீதி,*
*அச்சுவேலி.*

தகவல்:
திருமதி ராணி யோசேப்
(மகள்)

## உதைபந்தாட்டம்

ஸ்கந்தா விளையாட்டு அபிவிருத்தி மன்றத்தினால் நடத்தப்படும் நட்சத்திரங்களின் உதைபந்தாட்டப் போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் அரையிறுதி ஆட்டங்களில் கலந்துகொள்ளும் அணிகளின் விவரம் வருமாறு:-

★தெல்லிப்பழை யூனியன் கல்லூரி எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி

★கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி எதிர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி. (ஒ-5-86)

## கற்றல் உபகரணங்கள் விநியோகம்

'யுனிசெவ்' நிறுவனம் பளை, தம்பகாமம் கிராம அலுவலர் பிரிவில் மீளக்குடியமர்ந்த வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் சீருடைகளும் அண்மையில் வழங்கியது. (ஐ-117)

## தேவை

சர்வதேச அகதிகள் சம்மேளனம் (லண்டன்) கிளைக்கு தமிழில் கிரியைகள் செய்யக்கூடிய ஓர் இளம் பிராமணர் தேவை.

விண்ணப்பிக்க த.பெ.இல.24359
LONDON SW17 OFD
(23850) (29-12-17)


**நாகம்ஸ் சுன்னாகம்**

20முதல் 23வரை
மாதவன், கீது (அறிமுகம்), ஸ்ருதிகா நடித்த
நளதமயந்தி (ரீலஸ்)
காட்சி நேரம் : 11.00, 3.00, 7.00 (பு.நே.)

தீபாவளி வெளியீடு:
24 முதல்
இந்தியாவிலும்,
இலங்கையிலும்
ஒரே தினத்தில்
இளைய தளபதி
விஜய், ஜோதிகா,
கிரண் நடிக்க




(C29805)

**ராஜா யாழ்ப்பாணம்**

இன்று மட்டும்
பிரசாந்த்,
கிரண்,
வடிவேல்
நடித்த



காட்சிகள் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
21முதல்
மன்னன்
(C29804)

**லஷ்சுமி சினிமா இணுவில்**

அஜித், லைலா, நக்மா நடித்த
தீனா (ரீலஸ்)
காட்சி நேரம் 11.00, 3.00, 7.00 (பு.நே.)
(C30019)

**நிறைஞ்சனாஸ்**

இன்று முதல்
பிரபு, வினிதா நடித்த
வியட்னாம் காலனி (ரீலஸ்)
காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00 (பு.நே.)

**லிபேட்டி அச்சுவேலி**

ரஜனி, மீனா, கவுண்டமணி, செந்தில் நடித்த
எஜமான் (ரீலஸ்)
காட்சி நேரம்: 3.00, 7.00 (பு.நே)
(C30851)

தீபாவளி வாழ்த்துக்கள்

மாபெரும் மலிவு விற்பனை

திங்கள் முதல் வியாழன் வரை

(20-10-2003 - 24-10-2003)

❋இந்தியா, சிங்கப்பூர் நாடுகளில் இருந்து விசேடமாகத் தருவிக்கப்பட்ட கண்கவர் கட்டிங் காட்டுகள்

❋தென்னிந்திய முன்னணி நடிகர், நடிகைகள் மற்றும் சுவாமி, சீனறி வாழ்த்துக்கள்

❋ இலங்கை முன்னணி அனைத்து வெளியீட்டாளர்களினதும் தீபாவளி வெளியீடுகள் ஒரே இடத்தில்

மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

பூபாலசிங்கம் புத்தகசாலை

இல.4, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(C30920) (29-12-17)


## கோண்டாவில் மேற்கு கந்தர் வளவு ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையார் கோயில்

(காளிகோயில்)
பதிவு இல. HA 5/JA/651

### அந்தண சிவாச்சாரியார் தேவை

எமது ஆலயத்தில் நித்திய நைமித்திய கிரியைகளைச் செய்வதற்கு தகுதி உடையவர்கள் 20.10.2003 தொடக்கம் 31.10.2003 வரையும் தினமும் மாலை 4 மணி தொடக்கம் 6 மணிவரை பரிபாலனசபைத் தலைவர் திரு. இராமலிங்கம் நடராசா அவர்களிடம் பாடசாலை வீதி, கோண்டாவில் மேற்கு எனும் முகவரியில் தொடர்புகொள்ளவும்.

★குறிப்பு: 14.10.2003 அன்று யாழ். மேல் நீதிமன்ற உத்தரவின்படி பொதுக் கோயில் என்று தீர்ப்பளித்து ஆலயம், பரிபாலன சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(23865) (29-12-17)

இங்ஙனம்
ஆலய பரிபாலன சபை.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி வேலுப்பிள்ளை இராசம்மா

புங்குடுதீவு, முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் தற்போது 3ஆம் வட்டாரத்தில் வசித்தவருமாகிய திருமதி வேலுப்பிள்ளை இராசம்மா 16.10.2003 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னம்மாவின் மூத்த மகளும் சிவகுரு, பழனிவேல், நாகேஸ்வரி, தவமணிதேவி ஆகியோரின் சகோதரியும் யோகேஸ்வரன் (ஜேர்மனி), கிருஷ்ணகுமார் (சுவிஸ்), விஜிதா (சுவிஸ்), விமலா, சசிகுமார், ஸ்ரீதேவி (யாழ். வைத்தீஸ்வரா உயர்தர வகுப்பு மாணவி), ஜெயகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சபீனா (ஜேர்மனி), தர்சினி (சுவிஸ்), சிவதாசன் (சுவிஸ்), கருணாநிதி ஆகியோரின் மாமியாரும் பிரதீபன், சாருபா (ஜேர்மனி), டிஷாந்தன், திலக்சனா, டினோஜன், கீர்த்தனா (சுவிஸ்), வர்ஷா (சுவிஸ்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (20.10.2003) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மூன்னோடை புலம் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். 17.10.2003 உதயன் பத்திரிகையில் பிரசுரித்தபடி, உறவினர்கள் வருகைதர தாமதித்ததால் இறுதிக் கிரியைகள் இன்று நடைபெறுகின்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புங்குடுதீவு -3* (23868) (29-12-17)

*தகவல்:*
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


தீபாவளி தினம்வரை

சகல ஆடைத் தெரிவுகளுக்கும் விசேடகழிவு

மாபெரும் மலிவு விற்பனை

காவேரி சில்க்ஸ்

43,பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

(C30840) (29-12-17)

# அடுத்த வரவு-செலவுத் திட்டத்தில் ஊழியர்களுக்கு சம்பள உயர்வு

## தொழிற்சங்கத் தலைவர்களிடம் அமைச்சர் வஜிர உறுதி

அனைத்து அரச ஊழியர்களுக்குமான சம்பள அதிகரிப்பை வழங்க பிரதமர் ரணில் திடசங்கற்பம் பூண்டுள்ளார். அதன்படி அடுத்து வரும் வரவு - செலவுத்திட்டத்தில் சம்பள அதிகரிப்பை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் பொதுநிர்வாக மறுசீரமைப்பு அமைச்சர் வஜிர அபேயவர்த்தன.

அமைச்சருக்கும் தொழிற்சங்கங்களின் தலைவர்களுக்குமிடையிலான சந்திப்பு கடந்த வியாழனன்று கொழும்பிலுள்ள அமைச்சரின் வாசஸ்தலத்தில் நடைபெற்றது. அங்கு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

சுற்றுலாத்துறை அமைச்சர் காமினி லொக்குகே, உள்நாட்டு அலுவல்கள் மகாணசபைகள் திட்ட அமைச்சர் ஹரல்ட் குணதிலக மற்றும பலரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இலங்கையிலுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்களின் தலைவர்கள் கலந்துகொண்ட இச்சந்திப்பில் அமைச்சர் வஜிர அபயவர்த்தன, மேலும் கூறியதாவது:-

அரச ஊழியர்களின் உரிமைகளை எப்போதும் மதித்து நடக்கிறது. தொழிற்சங்கங்களின் கோரிக்கைகளும் அவ்வப்போது நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

விரைவில் நிர்வாக மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படும். அதற்கு ஊழியர்கள் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும். சிறந்த நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்த பல திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

ஊழியர்களின் நன்மை கருதி அமைச்சர் கருஜயசூரிய தலைமையில் அமைச்சரவை உபகுழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அக்குழுவின் அறிக்கை விரைவில் கிடைக்கும் அதன்படி ஊழியர்களுக்கான பல நன்மைகள் வழங்கப்படவிருக்கின்றன.

ஊழியர்களுக்கு நன்மைகளைச் செய்ய அரசு நடவடிக்கை எடுத்து வரும் போதும் சில தொழிற்சங்கங்கள் அரசைக் கவிழ்க்கும் நோக்குடன் போராட்டங்களை நடத்துவதற்கான முயற்சிக்குத் துணை போகின்றன.

ஜனநாயக நாட்டில் போராட்டம் நடத்த ஊழியர்களுக்கு பூரண உரிமையுண்டு. அதனை ஊழியரின் உரிமைகள் மறுக்கப்படுகின்ற போது தான் பயன் பயன்படுத்தப் படவேண்டும் என்று தெரிவித்தார்.

அமைச்சர் காமினி லொக்குகே அங்கு உரையாற்றுகையில், அரசு தற்போதைய ஆட்சியை பொறுப்பேற்ற ஒன்றரை வருடகாலத்தில் பிரதமரின் தீர்க்கதரிசனத்தால் சமாதானத்தை வென்றெடுக்கும் பாதையில் சென்றுகொண்டிருக்கிறது என்றார்.

அமைச்சர் ஹரல்ட் குணத்திலக்கவின் உரையைத் தொடர்ந்து அரச சேவை தொழிற்சங்கச் சம்மேளனத் தலைவர் டபிள்யூ.எச்.பியதாச, அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத் தலைவர் எஸ்லோகநாதன் மற்றும பலர் அங்கு உரையாற்றினார்.

இச்சந்திப்பில் ஊழியர்களில் ஒரு சாராருக்கு மட்டும் சம்பள உயர்வு வழங்கும் நடைமுறையை தொழிற்சங்கவாதிகள் எதிர்த்தனர். சம்பளப் பிரச்சினையைத் தீர்க்க சுயாதீன நிர்ணய சபையை ஏற்படுத்தி மக்களுக்கு சிறந்த சேவையை வழங்க அரசு முன வரவேண்டும் என்றும் தொழிற்சங்கவாதிகள் இச்சந்திப்பில் கேட்டுக் கொண்டனர். (ஐ)

## பொலீஸார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த மோட்டார் சைக்கிள் தரிக்காமல் சென்றபோது அங்கு முறுகல் நிலை ஏற்பட்டதாகவும் கூறப்படுகின்றது. பொலீஸாரை நோக்கி கற்கள் வீசப்பட்டன. கூடியிருந்த பொதுமக்களைக் கலைப்பதற்காக வானை நோக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் பதற்றம் நிலவியது. ( ஐ-72)

## பேச்சுக்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுவார்.

எனவே, அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெறப் போகும் பேச்சுக்களில் மூன்றாவது தரப்பு கலந்துகொள்வதை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் விரும்பவில்லை.

- இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்க வேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சு ஏற்கனவே கடற்படைத் தளபதிக்கு எழுத்து மூலம் உத்தரவிட்டிருந்தது. அதற்கமைய, புலிகளின் கப்பலை வழிமறிக்க விரைந்த கடற்படையினரின் இரண்டு கப்பல்களில் ஒன்றில் கண்காணிப்புக் குழுவின் திருகோணமலை அலுவலகப் பிரதிநிதி ஒருவரும் கூட்டிச்செல்லப்பட்டார். அவர் தம்முடன் செய்மதி மூலம தொடர்புகொள்ளும் தொலைபேசி ஒன்றையும் எடுத்துச் சென்றார். அதனைப் பயன்படுத்தி தமது பயணவிவரத்தைக் கண்காணிப்புக் குழு தலைமையகத்துக்கு அவர் அறிவித்துள்ளார். கண்காணிப்பு குழு அலுவலகம் குறிப்பிட்ட நிலைமை குறித்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடன் தொடர்பு கொண்டு வினவியுள்ளது, ஏனையோருக்கும் இத்தகவல் பரிமாறப்பட்டது. இதனால புலிகள் எச்சரிக்கை அடைந்தனர்.

புலிகளின் ஆயுதக்கப்பல் ஒளித்துக் கொண்டது. கடற்படைக் கப்பல்கள் அந்த இடத்துக்குச் சென்றடைந்த போது புலிகளின் கப்பல் அங்கிருந்து மாறிவிட்டிருந்தது.

- இப்படி தனது அறிக்கையில் கடற்படைத் தளபதி தெரிவித்திருக்கிறார் என அந்த இராணுவ விமர்சகா குறிப்பிட்டுள்ளார். (ஐ)


### ITN இன் தீபாவளி மலிவு விற்பனை

09.10.2003 தொடக்கம் 24.10.2003 வரை

ITN இன் மாபெரும் மலிவு விற்பனை

★ தமிழ் புதிய, பழைய ஓடியோ CD
★ தமிழ் புதிய, பழைய வீடியோ CD
★ கர்நாடக சங்கீத CD
★ MP3 CD
★ இந்து, கிறிஸ்தவ பக்திப் பாடல்கள்
★ DVD
★ கார்டூன் CD, DVD
★ பழைய திரைப்பட CDக்கள்

ACD, VCD, MP3 70 ரூபாவில் இருந்து

அனைத்தும் மாபெரும் மலிவு விலையில்!
உங்கள் தெரிவுகளுக்கு முந்திக்கொள்ளுங்கள்!!

ITN வீடியோ ஓடியோ மியூசிக் சென்ரர்

305, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி.

*Note* : இவ்விலைக்கழிவு தீபாவளி தினம் வரை மட்டும்.

(23701)(22-29-12)





(C/30570) (29-12)


# பாதாள உலகக் கோஷ்டியின் முக்கிய தலைவர் கைது!

கொழும்பு,ஒக்.20

பாதுக்கை ரயில் நிலையத்தில் வைத்து பாதாள உலகக் கோஷ்டியைச் சேர்ந்த மிக முக்கிய தலைவர் ஒருவரைப் பொலீஸார் கைதுசெய்துள்ளனர்.

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் இடம்பெற்ற பல கொலை மற்றும் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய இவர், கொழும்பு பிரதி பொலஸ்மா அதிபரின் கீழ் இயங்கும் ரகசியப் பொலஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவரின் கைது மூலம் பல பாதாள உலக கோஷ்டியினர் சம்பந்தமான தகவல்கள் வெளிவரவிருப்பதாகவும் விரைவில் பலர் கைதுசெய்யப்படலாம் எனவும் கொழும்பு பிரதிப் பொலஸ்மா அதிபர் அலுவலக வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (ஐ)

## அழிவுப் பாதை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்து வருகின்றனர். எல்லாவற்றிற்கும் மேலாக எம்மால் கட்டிக்காக்கப்பட்டுவந்த எமது நாடு துண்டாடப்படும் நிலையை எதிர்கொண்டிருக்கின்றது.

இத்தகைய நிகழ்வுகள் அனைத்துமே இந்நாட்டை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்ல ஆரம்பித்துள்ளன. இச்செயலை இந்நாட்டு மக்கள் வன்மையாகக் கண்டிக்கின்றனர். ஆகவே, மக்களின் விருப்பத்தை நிறைவேற்றி வைக்கவேண்டிய பொறுப்பை ஜனாதிபதி விரைவில் மேற்கொள்வார் என்று எதிர்பார்க்கிறோம்.

- இப்படி அவர் கூறினார்.

**அநுர பண்டாரநாயக்க**

ஜனாதிபதி ஆலோசகரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரபண்டாரநாயக்க அங்கு தமதுரையில் தெரிவித்ததாவது:-

இன்று எமது நாட்டின் ஆட்சியில் ஊழலும் மோசடியும் தலைவிரித்தாடுகின்றன. நாட்டின் எதிர்காலமே கேள்விக்குரியதாகியுள்ளது.

எனது தந்தையார் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற போதும் எனது தாயார் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற போதும் அதையடுத்து 1994 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற எனது சகோதரியின் காலத்திலும் நாட்டு மக்களின் அமோக ஆதரவு எமக்கிருந்தது. அதைப் போன்றதொரு சூழ்நிலை இன்றைய நிலையில் உருவாகியுள்ளது. இந்நிலையை நாம் நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

இந்நாட்டில் பொலீஸ்மா அதிபர் ஒருவர் மட்டுமே இருக்க முடியும். ஆனால், இன்று நால்வர் பொலீஸ்மா அதிபர்களாகவுள்ளனர். இது கேலிக்குரிய விடயமாகும். கடைமையிலிருந்த பொலீஸ்மா அதிபரும் போதைவஸ்து விற்பனை செய்யும் வியாபாரியுடன் சிநேகம் வைத்திருந்தார். ஆட்சி பீடத்திலும் கருத்தொருமிப்பு இல்லை.

தற்போதைய அரசு இன்னும் சிறிது காலம் ஆட்சி செய்தால் நாட்டின் பாதுகாப்பிற்கு உத்தரவாதமில்லாமல் போவதோடு எதிர்காலம் என்ற சொல்லுக்கே இடமில்லாமல் போய் விடும். ஆகவே, எமது ஜனாதிபதி தமது அதிகாரத்தைப் பிரயோகிக்க வேண்டிய காலம் ஏற்பட்டுவிட்டது. வெகுவிரைவில் இந்நாட்டின் ஆட்சியை எமது ஜனாதிபதி பொறுப்பேற்பார் என்பதில் சந்தேகம் இல்லை."

- இப்படி அவர் தெரிவித்தார். (ஐ-12)


**வடமராட்சி, யாழ். - கொழும்பு பயணிகள் வான் சேவை**

நேரடியாகவும் தொலைபேசி மூலமும் ஆசனப் பதிவு செய்யலாம்.
வாடிக்கையாளர் கட்டணம் 900/=

ஜெயா ட்ரான்ஸ்போட் & கொமினிகேசன்
கொடிகாமம் வீதி, நெல்லியடி, தொ.இ. 021 226 3500
JEYA COMMUNICATION COLOMBO-13
Tel:01-2478444, 01-2478443, 0777-271478
லொறி மூலம் பொருள்களை அனுப்பலாம்.


## இராமேஸ்வரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாமலும் முன் எச்சரிக்கை செய்யாமலும் பழுதான படகு மீது சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்று கூறப்படுகின்றது. அத்துடன் மீனவர்கள் மீது கடும் தாக்குதல்களையும் மேற்கொண்டனர் என்று கூறப்படுகின்றது.

இதில் மீனவர் ஒருவர் தலைப் பகுதியில் காயமடைந்தார்.

இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கிப பிரயோகம் செய்ததால் இராமேஸ்வரம் மீனவர்கள் பதற்றமடைந்துள்ளனர். நேற்று அவர்கள் தொழிலுக்காக கடலில் இறங்கவில்லை என்று கூறப்படுகின்றது.

தலையில் காயமடைந்த மீனவர் இராமேஸ்வரம் அரச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

படையினரின் தாக்குதலுக்கு இலக்கான படகு இராமேஸ்வரம் கரையில் நங்கூரமிடப்பட்டுள்ளது.


**உதவியாளர் உடன் தேவை**

எமது கல்வி நிறுவனத்துக்கு 25-30 வயதுக்குட்பட்ட ஆண் உதவியாளர்கள் உடன் தேவை.

*20.10.2003 முதல் 25.10.2003 இற்குள் நேரில் வரவும்.*

விக்னா
கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(23815)


# மரண அறிவித்தல்கள்

## ஆறுமுகம் தில்லையம்பலம்

மருதடி காரைநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் தில்லையம்பலம் நேற்று (19-10-2003) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20-10-2003) திங்கட்கிழமை மாலை 4மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தில்லை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மருதடி, காரைநகர்.* (C/30922)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## செல்லையா வள்ளிப்பிள்ளை

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லையா வள்ளிப்பிள்ளை அவர்கள் நேற்று (19.10.2003) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீரகத்தி - செல்லையா அவர்களின் அன்பு மனைவியும் கனகேஸ்வரி, அன்னபூரணம், சந்திரவதனா (ஆசிரியை, சிறிமுருகன் வித்தியாலயம் ஏழாலை), ஞானரஞ்சிதமலர் ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற செல்லப்பா - தங்கமுத்து தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா, சின்னத்தம்பி, கதிரித்தம்பி, பானுப்பிள்ளை, செல்லம்மா மற்றும் சரஸ்வதி ஆகியோரின் சகோதரியும் செ.மயில்வாகனம், சு.பத்மலிங்கம், த.கிருஷ்ணமூர்த்தி ஆகியோரின் மாமியாரும் ரஜனி, முருகதாஸ், மோகனதாஸ், ஜாமினி, சர்மினி (யூனியன் கல்லூரி), பாமினி (யூனியன் கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (20.10.2003) திங்கட்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஏழாலை மேற்கு*
*(மகாவித்தியாலம் அருகில்),*
*ஏழாலை.* (23869) (29-12)

தகவல்:
ம.மோகனதாஸ் (பேரன்).

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.10.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.